# தமிழரசு

16 - 11 - 1977

மலர் : 8 இதழ் : 10

இந்த இதழில்

பக்க எண்

புயலும் வெள்ளமும் செய்த கொடுமைகள் 2

உறவுகள் தொடரட்டும்! ... 7

செய்தி-ஒலிபரப்புத்துறையில் சிந்திக்க வேண்டியவை! ... 13


பால்வளத் துறையின் பாங்கான பணிகள் 17

நான்கண்ட வ. உ. சி. .. 26

வீட்டு வசதிகளை விரைவாகப் பெருக்கிடு வோம்! ... 28

நேருவின் வாழ்விலே! (படத்தொகுப்பு). 33

நேருவின் வாழ்க்கைக் குறிப்புகள் ... 41



## வெள்ளத் துயர்துடைப்புப் பணிகளுக்கு முதல்தவணையாக 15 கோடி ரூபாய்!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் 20—11—1977 அன்று அமைச்சர்களுடனும், உயர் அதிகாரிகளுடனும் புயல், வெள்ள நிவார்ண நடவடிக்கைகள் குறித்துக் கலந்தாலோசித்தார். அந்தக் கூட்டத்தில் பின்கண்ட முடிவுகள் செய்யப்பட்டன.

* வெள்ள நிவாரண நடவடிக்கைகளுக்கு முதல் தவணையாக ரூ. 15 கோடி ஒதுக்குவது என்று தமிழக அரசு முடிவு செய்தது.

* வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்துக்கும் கொடுக்கப்படும் உதவித் தொகை ரூ. 80 லிருந்து ரூ. 100ஆக உயர்த்தப் படும். அதுதவிர ஒவ்வொரு குடும்பத்துக்கும் 2 சேலைகளும், 2 வேட்டிகளும் வழங்கப்படும்.

## புயல்-வெள்ளத் துயர் துடைப்புப் பணிகளுக்காக மத்திய அரசு 5 கோடி ரூபாய் வழங்கியது!

தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் ஆகிய இரு மாநிலங்களின் புயல்-வெள்ளத் துயர்துடைப்புப் பணிகளுக்காக, 'அட்ஹாக்' அடிப்படையில், தலா ரூபாய் 5 கோடியை மத்திய அரசு வழங்கியுள்ளது. இவ்வுதவி முதல் உதவியாகவே அமையும். இரு மாநிலங்களிலும் ஏற்பட்டுள்ள சேத விவரங்கள் முழுமையாக கிடைத்தபின், மத்திய அரசு மேலும் உதவக்கூடும்.



புயலும் வெள்ளமும்

# செய்த கொடுமைகள்




உள்ளத்தை உருக்கி கண்களைக் குளமாக்கும் காட்சிகள் !













நாட்டின் பொருளாதாரத்தைச்
சீர்குலைத்தக் காட்சிகள் !










## புயல்-வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்கள்!

| | |
|---|---|
| இறந்தவர்களின் எண்ணிக்கை | 481 |
| சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை | 2,99,749 |
| பாழடைந்த நெற்பயிரின் பரப்பு | 4,46,698 ஏக்கர் |
| அழிவுற்ற வாழைத் தோட்டங்களின் பரப்பு | 14,000 ஏக்கர் |
| முறிந்து விழுந்த தென்னை மரங்கள் | 1 இலட்சம் |
| வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு இறந்த கால்நடைகளின் எண்ணிக்கை | 19,955 |











வரலாறு காணாத வகையில் தமிழகத்தை 12—11—1977 அன்று தாக்கிய புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் 13—11—1977 அன்று விமானத்திலிருந்து பார்வையிட்டார். (கரூர்-திருச்சி இரயில் பாதையில் அமராவதி ஆற்றின் குறுக்கேயுள்ள இரயில் பாலம் உடைந்து பாலத்தின்மேல் வெள்ளம் ஓடுவதைப் படத்தில் காணலாம்.)



# வெள்ளப் பகுதிகளில்...

மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்களும், மாண்புமிகு மத்திய பெட்ரோலிய-இரசாயனத் துறை அமைச்சர் திரு பகுகுணா அவர்களும், மாண்புமிகு மத்திய எரிபொருள் துறை அமைச்சர் திரு பா. இராமச்சந்திரன் அவர்களும், மாண்புமிகு தமிழக நிதி அமைச்சர் திரு கி. மனோகரன் அவர்களும், மாண்புமிகு தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்களும், 18-11-1977 அன்று, வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட பகுதிகளை விமானத்தில் இருந்து பார்வை யிட்டுச் சேதங்களை மதிப்பீடு செய்தனர்.

(44-ம் பக்கம் பார்க்கவும்)

# உறவுகள் தொடரட்டும்!

தமிழ் படித்தோரின் ஏக்கத்தைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு முதலிடம் தரும் நியாயமான கடமையைத் தமிழக அரசு நிறைவேற்றும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் அறிவித்துள்ளார்.

நீலபத்மநாபன் எழுதிய ''உறவுகள்'' என்னும் தமிழ் நாவலுக்கு அண்ணுமலை அரசர் நினைவுப் பரிசாக, ரூபாய் பத்தாயிரத்தை வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

''சில நேரங்களில் ஒரு சிலருக்குக் கிடைப்பதற்கரிய வாய்ப்புக் கிடைப்பதுண்டு. அதைப்போன்ற ஒரு வாய்ப்பு இன்று எனக்குக் கிடைத்திருக்கிறது.

''இங்கே பேசிய மாண்புமிகு நீதிபதி (இஸ்மாயில்) அவர்கள் இந்த நூலைத் தேர்வு செய்த குழுவில் ஒருவராக இருந்த காரணத்தால், இந்த விழாவில் கலந்து கொள்வதற்கு அவருக்குத் தகுதி இருக்கிறது என்று குறிப்பிட்டார்.

''அவரைப்பற்றி, எழுத்தாளர் மத்தியில் அவரது தமிழறிவைப் பற்றி, எப்படி எல்லாம் மதிக்கப் படுகிருர் என்பது பற்றி நீங்களும் நானும் அறிந்து வைத்திருக்கிறோம். அவரைப்பற்றிப் பேச நான் அச்சப்படுகிறேன்.

''எந்த ஒரு மனிதனும் வாழ்க்கையில் தனது மனத்தில் தன்னுடைய அறிவுக்கேற்பத் தோன்றும் எண்ணங்களின் விளைவுப்படி வாழ விரும்பும்போது, அவனைச் சுற்றி ஒரு உலகம் உருவாகிறது. சூழ்நிலைக்கேற்ப அந்த உலகம் பெரியதாகவோ, சிறியதாகவோ இருக்கலாம். தன்னைப்பற்றி அவன் என்னென்ன கருத்துக்களை நினைக்கிருனே, சிந்திக்கிருனே அதனுல் ஏற்படுத்திக் கொள்ளப்

**மாண்புமிகு முதலமைச்சர்**
**திரு எம். ஜி. ஆர்.**



பட்ட சுற்றுச் சூழ்நிலைகளுக்கு அப்பால் அது எதிரொலிக்கின்றது. அவன் சிந்திக்கின்றவை, நினைப்பவைகளுக்கு மாருக — அவன் எதிர்பாராதது நடந்து விடுகிறது.

## எழுத்தை ஆள்பவர்கள்!

''இங்கே உள்ள உங்களில் எத்தனை பேர் எழுத்தாளர்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனுலும் நான் உங்களை எல்லாம் எழுத்தாளர்கள் என்றே கருதி எனது கருத்தைக் கூறினுல், அது தவருகாது என்று கருதுகின்றேன்.

''எழுத்தாளர்கள் என்ருல் எழுத்தை ஆள்பவர்கள் என்று கருதுவதால்-அந்த எழுத்துக்கு அவர்கள் உரிமையுள்ளவர்கள் எனக்கருதுவதால் — உங்களிடம் இவ்வளவு பெரிய பொறுப்பு வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த வேளையில் சிந்தித்துப் பார்க்கின்றேன்.

## எழுத்தின் வகைகள்!

''எழுத்துக்கள் என்பதில் பல்வேறுவகை இருக்கின்றன. பிறரைச் சிந்திக்க வைக்கிற மாதிரி எழுதுவது ஒரு வகை, பிறரைப் புண்படுத்தாமல் எழுதுவது ஒருவகை. பிறரைச் சிரிக்கவைத்துச் சிந்திக்க வைப்பது என்பது ஒரு வகை; அப்படிச் சிந்திக்க மறுப்பவர்களைச் சந்திக்கு இழுப்பது என்பது ஒரு வகை.

**''எழுத்தாளர்களின் திறமை என்பது காலப்போக்கில் மாறுவது என்ருலும் அந்த எழுத்தாளர்களின் எழுத்துக்கள், எதிர்காலச் சந்ததிகளின் தலையெழுத்தை நிர்ணயிக்கின்றவைகள் என்பதை அழுத்தந் திருத்தமாக நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.**

''எழுத்து என்ருல் அழகாக எழுதுவதல்ல. சிலருடைய கையெழுத்து மிக அழகாக இருக்கும்; ஆனுல் அது யாருக்கும் பயன்படாது. பயன்படாத எந்த எழுத்துக்களும் நாட்டுக்கு துரதிர்ஷ்டமாகக் கருதப்படுபவையாகும். அந்த எழுத்துக்கள் நாட்டின் எழுத்தை மாற்றக் கூடியதல்ல.

''சில நேரங்களில் நேரடியாக எழுத்துலகில் பங்கு பெற முடியாவிட்டாலும், சில பரிதாபத்துக்குரியவர்கள் தாங்கள் எழுதி, யாருடைய பெயரிலோ வெளியிடுகிறவர்களாக இருக்கிருர்கள் என்ருலும், அப்படிப்பட்ட நிலை இங்கே இல்லாமல், தகுதி உள்ளவர் எழுதி, அதை நல்லோர் மத்தி.

யில் பாராட்டக் கேட்டுப் பரிசு பெறுகிற இந்த விழாவில் நான் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

''போட்டி என்பது வேறு—பொறுமை என்பது வேறு என்பதை நாம் அறிந்து இருக்கிறோம்.

''தங்களது கருத்துக்களை யாருடைய தீர்ப்புக்கோ விட்டுவிட்டு, ஒன்றிரண்டு பேரின் கருத்துக்கள்தான் பரிசைப் பெறும் என்று தெரிந்தும் மீதி உள்ளவர்களது கருத்துக்கள் பரிசு பெறாது என்று தெரிந்ததற்குப் பிறகும்-போட்டியில் துணிந்து கலந்து கொண்ட மற்றவர்களையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''பத்தாயிரம் ரூபாய் பரிசு என்பது எவ்வளவு உயர்ந்த தொகை என்பதை இன்றையச் சூழ்நிலையில் எழுத்தாளர்களுடன் நெருங்கிப் பழகுகிறவன் என்ற காரணத்தால் நான் நன்றாக அறிவேன்.

**எழுத்தாளர்கள் செய்யும் தியாகம்**

''மக்களுக்குப் பயன்படும்—மக்களுக்காகவே பயன்படும் கருத்துக்களை முன்வைத்து—அவை மக்களால் ஏற்கப்படுகின்றனவா என்பதைப் பற்றிக் கவலைப்படாமல்—அவை மக்களுக்கு நிச்சயம் பயன்படும் என்று கருதி இப்படிப்பட்ட போட்டியில் பங்கு பெறுவது என்பது நாட்டுக்கு எழுத்தாளர்கள் செய்கிற தியாகம் ஆகும்.

''எழுத்தாளர்களைப் பற்றிப் பேசுவதற்கு எழுதத் தெரியாத என்னை அழைத்திருப்பதற்கு நான் வருத்தப்பட்டேன். என்னை ஏன் அழைக்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு, என்னை அழைத்தவர்கள், 'நீங்களும் எழுதியிருக்கிறீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும்' என்று சொல்லிக் கூப்பிட்டார்கள். அதைத்தான் நான் நல்லதொரு வாய்ப்பு என்று பேச்சின் துவக்கத்தில் குறிப்பிட்டேன்.

''இங்கே 'உறவுகள்' நூலை எழுதிய சகோதரர், எழுத்தில் புதிய முறையைக் கையாண்டுள்ளார். இந்த எழுத்தில் அவர் எந்த அளவுக்கு ஊக்கமாய்ச் செயல்பட்டிருக்கிறார் என்பது புரிகிறது. அவர் படைத்திருக்கிற பாத்திரங்கள் அதனதன் அனுபவத்துக்குத் தக்க மாதிரி, உணர்வுகளைக் கொட்டுகிற வகையில் படைத்திருக்கிறார் என்பதை நூலைப் படிக்கிறவர்கள் உணர முடியும்.

''கமலாம்பாள் சரித்திரத்தையும் படித்திருக்கிறோம். இப்போது 'உறவுகளை'யும் படிக்கிறோம். கமலாம்பாள் சரித்திரத்தை எழுதியபோது, எழுதியவரை ஒரு ஆசிரியராக ஏற்றிருப்பார்களா என்பது ஆச்சரியத்துக்குரியதுதான்.

''சிலர், அவரைக் கேலி செய்திருக்கவும் கூடும். எந்த எழுத்தாளர்களும் எதிர்காலத்துக்கானபடி அமைத்துக் கொடுப்பவர்கள்—பாலம் அமைத்துக் கொடுப்பவர்கள்-என்பதை மனத்தில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

**தமிழ்மொழியின் சிறப்பு**

''தமிழ் மொழியை யார் எப்படிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றாலும் அப்படி எல்லாம் பயன்படத்தக்க அளவுக்குத் தமிழ்மொழி பரவி, விரிந்து தேவையான சொற்களை வழங்குகிற மொழியாக இருக்கிறது. நான் இதனைக் கூறுவது எனது பேராசையின் வெளியீடு என்றோ அல்லது இப்படிப் பேசினால்தான் அது பேச்சாக இருக்கும் என்று கருதிப் பேசுவதாகவோ நீங்கள் நினைத்துக் கொள்ள வேண்டாம்.

''பாலிமொழியிலிருந்து—சமஸ்கிருத மொழியிலிருந்து-தமிழுக்கு எத்தகைய சோதனைகள் ஏற்பட்டது என்பதை மறந்துவிடக் கூடாது.

''நான் ஒருவரிடம் நாடகம் ஒன்று எழுதித்தரும்படி கேட்டேன். பாண்டிய நாட்டை ஆண்ட ஒருவரது சரித்திரத்தை அவர் எழுதிக் கொடுத்தார்.

''தமிழ் இலக்கியத்தை அழித்தாலொழிய தமிழர்களை அடக்க முடியாது—தமிழுணர்வைச் சிதைக்க முடியாது—என்று கருதியவர்களிடமிருந்து பாண்டிய இளைஞன் ஒருவன் இலக்கியத்தைக் காத்து, தமிழைக் காத்து, பாண்டிய நாட்டை மீண்டும் தமிழருக்கே சொந்தமாக்கிக் கொடுத்தான்.

''இந்தக் கதையை அந்த நண்பர் எனக்கு எழுதிக் கொடுத்தார்.

''விஞ்ஞான வளர்ச்சியில் எப்படி எல்லாம் மாற்றம் ஏற்படுமோ என்று கருதத்தக்க நிலையில் விளையும் உணர்வுகள்-விளைவுகள்-அத்தனையும் தமிழால், அதன் சுற்றுச் சார்புள்ளனவாக இருக்கும் என்பதைக் கவனிக்கும் அவசியத்தில் இந்த நாடு உங்களைப் பாராட்டியே தீரும்.

**எழுத்தாளர்களின் கடமை**

''ஒரு கதாசிரியர், ஒரு கதாநாயகனை உருவாக்குகிறார் என்று வைத்துக் கொள்வோம். பிறகு ஒரு வில்லன் பாத்திரம் ஒன்றை உருவாக்குகிறார் என்று வைத்துக் கொள்வோம்.

''கதாசிரியர் எதை நியாயம் என்று கருதுகிறாரோ, எது நீதிக்கு மாறுபட்டது அல்ல என்று கருதுகிறாரோ அதனை அந்தக் கதாநாயகன் பாத்திரத்தில் வைப்பார். அதற்கு எதிர்மாறான கருத்தை—குணாதிசயத்தை—எதிரியின் பாத்திரத்தில் வைப்பார். அப்படி அவர் சொல்கிறபோது இந்தச் சமுதாயம் எப்படி இருக்க வேண்டும் என்று அவர் அந்த எழுத்தில் கூறுகிறார் என்று அர்த்தமாகிறது.

''ஆனால் அதே எழுத்தாளர் கதாநாயகன், வில்லன் குணாதிசயங்களை மாற்றியமைத்திருப்பாரானால், அவர் இந்த நாட்டுச் சூழ்நிலையை மாற்ற முயலுகிறார் என்று அர்த்தம். ஆக எழுத்தாளர்களின் கடமை, மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

''தமிழர்க்குரிய பண்பை—தமிழர்க்குரிய கலாச்சாரத்தை-நிறைவேற்றும் காரியத்தைச் செய்ய எழுத்தாளன் என்று யார் முன் வந்தாலும்-அவர்களது கருத்தை மக்கள் ஏற்கிறார்களா இல்லையா என்பது பிரச்சினையல்ல-ஆனால் அந்த எழுத்தாளர்கள் தங்களின் எழுத்தைப் பயன்படுத்தி எத்தனை பெரிய சமுதாய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கக் கேட்டுக் கொள்கிறேன்.

**'உறவுகள்' எடுத்துக்காட்டும் உண்மை**

''இங்கே இளைஞர் ஒருவர் 'உறவுகள்' என்று எழுதி, நமது உறவுகள் எப்படிப்பட்டது, எப்படி இருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

''அவரது 'உறவுகளில்' ராஜகோபால், பரமேஸ்வரன், சிவகாமி என்று வருகிற எந்தப் பாத்திரமானாலும் அதன் உணர்வுகள்—அந்தப் பாத்திரம் மூலம் அவர் தெரிவிக்கிற கருத்துக்கள்—நிலைமைகள் சமுதாயத்தில் ஆங்காங்கே நடைபெறுகிற ஒரு பிரச்சினையின் எதிரொலிகள்தான் என்பதைப் படிப்பவர்கள் உணர முடியும்.

''கணவனை இழந்த ஒரு தாய் அனாதையாக்கப் படும்போது, அவரது மகன்-12 வயதுப் பையன் ஒரு மரத்தடியின் கீழ் சென்று வேலை செய்கிறான் என்று ஆசிரியர் குறிப்பிட்டுக் காட்டியிருப்பது ஆங்காங்கே நடைபெறும் நிகழ்ச்சிகளின் வரைகோள் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''12 வயதுப் பையன் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக வேலைக்குப் போகிறான்-உழைக்கிறான்-தியாகியைப்போல் வாழ்கிறான் என்பதல்ல பிரச்சினை. இந்த நாட்டில் வாழ்வதற்கு உரிமையுள்ள அவன் படித்துப்பட்டம் பெற்று வேலைக்குச் செல்ல முடியாத நிலை இருக்கிறது—இந்தச் சமூகம் அப்படிப்பட்ட நிலையில் இருக்கிறது என்பதைத்தான் ஆசிரியர் உணர்த்திக் காட்டுகிறார். எழுத்தாளர் எதைக் கூறினாலும், அது இந்தச் சமுதாயத்தின் நிலையை உணர்த்துவதாகவே இருக்கும்.

## மணிக்கொடியின் பணி !

''முன்பு முப்பது முப்பத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் 'மணிக்கொடி' வாரப்பத்திரிகை வெளிவந்ததை நீங்கள் அறிவீர்கள். அந்தப் பத்திரிகையில், புதிய எழுத்தாளர்களை ஊக்குவித்தார்கள். அதன் விளைவாக, 'பாரதியார் தேசீய கவியா? மகா கவியா?' என்ற விவாதத்தைக் கூட நடத்தினார்கள். இன்னும் என் மனத்தில் அது பசுமையாக இருக்கிறது. ஆனால் அப்போது எனக்குள் ஏற்பட்ட கேள்வி எல்லாம்-நான் அப்போது காங்கிரஸ்காரன் என்பதை உங்களுக்குச் சொல்லி விடுகிறேன்—'பாரதியார் மகாகவியா? தேசிய கவியா? என்பதற்காக இப்படி எழுத்துக்களைப் பயன்படுத்துகிறார்களே—அவர் தேசியக்கவியாக இருந்தால் என்ன? மகாகவியாக இருந்தால் என்ன? அவர் எப்படி இருந்தாலும் சுதந்திர தாகத்தை-விடுதலை உணர்ச்சியை - ஏற்படுத்தியவர் தானே என்று நான் கருதியதுண்டு என்பதை இங்கே தெரிவித்துக் கொள்வதில் தவறில்லை என்று கருதுகின்றேன்.

''எழுத்தாளரைப் பொறுத்த வரையில் எதிர்காலத்தில் அவர்களது உள்ளத்து உணர்வுகள் இன்னும் நம்பிக்கையுள்ளதாக—வன்மையுள்ளதாக ஆகுமே தவிர—பக்குவம் அதிகமாகுமே தவிர அதில் எப்போதும் குழப்பம் இருக்காது.

''நான் இங்கே ஒன்றை உறுதியாகச் சொல்வேன். இந்த நாட்டின் எதிர்காலம் உங்களது கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

''ஒரு விஷயத்தை நான் பல இடங்களிலும் சொல்லியிருந்தாலும் இங்கே சொல்வது பொருத்தம் என்று கருதுகின்றேன்.

''மணிக்கொடி பத்திரிகையில் ஒரு கதைப் போட்டி நடத்தப்பட்டது. அதில் மாணவர்கள் கலந்து கொண்டார்கள். ஒரு மாணவன் தற்கொலை செய்து கொள்ளும்போது என்ன உணர்வு இருக்கும் என்ற நிலையில், ஒரு பாத்திரத்தை அமைத்திருந்தான். தற்கொலை செய்து கொள்ளும் முன் என்ன உணர்வைப் பெற்றிருப்பார்கள் என்பதை எழுத்தில் காட்ட நினைத்த அந்த மாணவன் எதுவுமே தோன்றாத நிலையில், தானே தற்கொலை செய்து கொண்டு அந்த நேரத்தில் என்ன உணர்வு தோன்றுகிறது என்பதை அறிந்து கொள்ள ஆசைப்பட்டு ஒரு கத்தியை எடுத்து, தன்னையே அவன் குத்திக் கொண்டான். ஆனால் அவனுக்கு அப்போது என்ன உணர்வு தோன்றிற்று தெரியுமா? சாவதற்குள் எழுதி முடித்து விட வேண்டும் என்று தான் அந்த மாணவனுக்குத் தோன்றிற்று. அவனது முயற்சி வீணாயிற்று. புதிய எழுத்தாளர்கள் உருவாவதற்கு மணிக்கொடி காரணமாக இருந்தது என்பதை அனைவரும் அறிவீர்கள்.

## எழுத்தாளர்களுக்குப் பஞ்சமில்லை!

''மணிக்கொடி பத்திரிகையில் அப்போது ஒரு அறிவிப்பு வெளியிட்டிருந்தார்கள் 'எழுதுகிற கதை வேறு மொழியைச் சார்ந்தது என்றால், யாருடையது என்பதை எழுதிவிடுங்கள்' என்று அந்த அறிவிப்பு வெளிவந்தது. அப்போதே எவ்வளவு எச்சரிக்கையாக இருந்திருக்கிறார்கள் என்பதற்காக இதனைக் கூறுகின்றேன். இப்படிப்பட்ட பரிசுத் தொகைகள் அறிவிக்கப்படாத காலத்திலும்கூட, எப்படி எழுத்தாளர்கள் எழுத முன்வந்தார்கள் என்பதற்காகவும் இதனைச் சொல்கிறேன்.

''தமிழகத்தைப் பொறுத்த வரையில் எழுத்தாளர்களுக்குப் பஞ்சமில்லை. தமிழ் எழுத்தாளர்களுக்குப் பஞ்சமில்லை. தமிழ் எழுத்தாளர்களும், படித்த எழுத்தாளர்களும் இங்கே நிறையப் பேர் இருக்கிறார்கள்.

''நான் 'சிவகாமியின் சபதம்' கதையைப் படமாகத் தயாரிக்கத் தீர்மானித்திருந்த நேரத்தில் எனக்கு மலேசியா, ஊட்டி போன்ற இடங்களில் இருந்து கடிதங்கள் வந்தன. 'இங்கெல்லாம் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடங்கள் இருக்கின்றன. வாருங்கள்' என்று பலரும் கடிதம் எழுதியிருந்தார்கள். அந்த அளவுக்குவரலாற்று விவரம் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள்.

''நான் கூறுவேன்-எழுத்தாளர்களுக்குப் பஞ்சம் என்று கூறுவதை நான் ஏற்கமாட்டேன்—இப்படிப்பட்ட பரிசுத் தொகை தரப்படுவது சாலப் பொருத்தமான செயல் என்பேன்.

**''எந்த நேரத்தில், எந்த கருத்தை, எப்படி சொல்வது என்பதைப் பொறுத்துத்தான், அவர்களது தியாகமும், அறிவாற்றலும் இந்த நாட்டில் புகழுக்குரிய இடத்தில் போய்ச் சேருகிறது.**

## அண்ணாமலை அரசர் ஆற்றிய அரும்பணி !

''டாக்டர் அண்ணாமலைச் செட்டியார் தமிழிசைக்குச் செய்த சேவை பற்றி இங்கே சொன்னார்கள். தண்டபாணி தேசிகர் தமிழிசையைப் பாடினார். அவரை மேடையேறச் செய்து மிளிரச் செய்தவர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள். மறைந்திருக்க வேண்டிய கட்டத்தில் பல இசைக் கலைஞர்கள் இருந்தபோது, அவர்களில் பலரைக் காத்துத் தனது கடமையைச் செய்தவர் அண்ணாமலைச் செட்டியார்.

**''நீங்கள் ஆற்றும் தமிழ்த் தொண்டுகள் பாராட்டப்படாமலும் இருக்கலாம். ஆனால் உங்கள் எழுத்துக்கள் எதிர்காலத்தில் இந்த நாட்டை ஆளப்போகின்றன.**

''தமிழ்க் கருத்து—தமிழ்ப் பண்பாட்டுக்கான உறவுகள்—என்றைக்கு இந்த நாட்டை முழுமையாக ஆள்கிறதோ அன்று தான் தமிழ் எழுத்துக்கள் விருப்பு, வெறுப்பின்றி காப்பாற்றப்படும்.

''பணம் வைத்திருப்பது பெரிதல்ல; அதைப் பிறருக்காகப் பயன்படுத்துவதுதான் அர்த்தமுள்ளதாக இருக்கும். அந்த வகையில் எம். ஏ. சிதம்பரம் அவர்கள் இப்படிப்பட்ட நல்ல காரியங்களைத் தொடர்ந்து செய்வதன் காரணமாக, நான் அவரது குடும்பத்தாரைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

**மாவட்ட அளவில் எழுத்தாளர்களுக்குப் பரிசு!**

''இந்த அறக்கட்டளை நடத்தி வருவதைப்போல, தமிழக அரசும் விரைவில் எழுத்தாளர்களுக்கான ஒரு சீரிய திட்டத்தைக் கொண்டு வர இருக்கிறது.

''பரிசுத் திட்டத்தை பெரிய அளவில் வைத்து அது ஒரு பரிசாக இல்லாமல், மாவட்ட வாரியாகப் பரிசுகளை வழங்கத் திட்டம் கொண்டு வரப்படும்.

''இது உங்கள் பணம்தான். மக்களின் பணம் மக்களுக்கே பயன் படட்டுமே என்ற நோக்கத்தில் இதைத் தெரிவிக்கிறேன்.

''தமிழில் அக்கறை எடுத்துப் படிப்போர் எதிர்காலத்தில் என்ன செய்வது என்ற கவலையில்லாமல் இருக்கச் செய்ய வேண்டும். தமிழ் படித்தவர்களுக்கு—தமிழர்களுக்கு—எதிலும் முதலிடம் தரப்பட்டாக வேண்டும் என்று நான் கூறுவது நியாயத்தின்பால் பட்டது என்பதை நீங்கள் உணரவேண்டும்.

''தகுதிகளைப்பற்றி—உறவு பற்றி ஆசிரியர் எழுதியிருக்கிறார். நான் கேட்டுக் கொள்வதெல்லாம், தமிழ் உறவு, தமிழர் உறவு, சமுதாய உறவு சமுதாயத்துக்கும் பண்பாட்டுக்கும் உள்ள உறவு—நிதிக்கும், நாணயத்துக்கும் (காசு) உள்ள உறவு—ஒழுங்குக்கும், மனிதனுக்கும் உள்ள உறவு—மனிதனுக்கும் நாட்டுக்கும் உள்ள உறவு—சாதிக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு—எழுத்துக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு—இவைகளைப்பற்றி நீங்கள் எழுதுவீர்களேயானால், நீங்கள் தமிழகத்தில் நல்ல காரியத்துக்கு வித்திட்டவர்கள் ஆவீர்கள். அந்த வித்து வேரூன்றி வளர்ந்துவிடும்.

''உங்களது உள்ளத்தில் என்னென்ன கேள்விக் குறிகள் இருக்கின்றன என்பது தெரிகிறது. எழுத்தை - அதிலும் தமிழ் எழுத்தை - ஆளுகிற நீங்கள் கேள்விக்குறிகளைக் கொண்டிருக்கிறீர்கள் என்பது புரியாமலில்லை.

''நீங்கள் என்ன கூறினாலும், யாரைப்பற்றிக் கூறினாலும்—பெரியோர் எதைக்கூடாது என்றனரோ அதைத் தவிர்த்து-நீங்கள் தமிழ்ப்பணியை வெளிக்காட்டுகிற கருத்தாக வெளியிடுங்கள்.



"அறிவுப் பண்ணைக்குப் பணியாற்ற முன்வருபவர்களை நாடு வரவேற்பதில்லை. நையாண்டி செய்கிறது. மதிப்பளிப்பதில்லை - மாச்சரியத்தை வாரி வீசுகின்றது. துணை புரிவதில்லை; தொல்லை தருகிறது. எனினும் அந்த ஒரு சிலரால்தான் நாடு முன்னேறுகிறது.

—அண்ணா

**தமிழ்ப்பண்பாட்டை வளர்த்து வழி காட்டுங்கள் !**

''எல்லோருடைய கருத்தும் எல்லோருக்குமே ஏற்றதாக இருப்பதில்லை. உங்கள் கருத்து சிலருக்கு வெறுப்பானதாகக்கூட இருக்கலாம். தவறு செய்யும் சூழ் நிலைகள் அனுமதிக்கப்பட்டிருக்கிற இந்த நாட்டில், உங்களின் நல்ல கருத்துக்கள் சிலருக்கு வெறுப்பை யூட்டலாம். அது குறித்து நீங்கள் கவலைப்படாமல் தமிழ்ப் பண்பாட்டை நீங்கள் வளர்த்து, மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**'கல்கி'யின் பெருமை !**

''நம்மால் மதிக்கப்படுகிற 'கல்கி' அவர்கள் எழுதிய எழுத்து எனது நினைவில் பசுமையாக இருக்கிறது. இரண்டு பேருக்கு வாக்குவாதம் நடைபெறுகிறது. ஒருவர் வசதியில் உள்ள பெரியவர்-மற்றவர் தெருச்சண்டை போடுகிறவர். இருவரும் வாதம் புரிகின்றனர். அந்தத் தெருச் சண்டைக்காரர், மூதாதையர்களையெல்லாம் சந்திக்கு இழுத்தார் என்று 'கல்கி' சுருக்கமாக எழுதியிருந்தார். மூதாதையரைச் சந்திக்கு இழுத்தான் என்று எழுதியிருப்பதில் நாம் அதன் உள்ளர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது அல்லவா?

''ஒரே வார்த்தையில் பிரச்சினையை விளக்கிய 'கல்கி'யைப் போன்ற எழுததாளர்கள் நம்மிடையே இருக்கிறார்கள்.

''நான் எழுத்தாளர்களைக் கேட்டுக் கொள்கிறேன்; எழுதும்போது எங்களையும் மறந்து விடாதீர்கள் என்று. இப்படி நான் கூறுவது உங்கள் உள்ளத்தை ஈர்ப்பதற்காக அல்ல; நான் அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திப்பவன் கிடையாது-மக்களின் வாழ்வைப் பற்றிக் கவலைப்படுகிறவன்!

இந்த மூன்றுமாதக் காலத்தில் நான் பல பேர் கூறிய பிரச்சினைக்கு வாதம் செய்து அதைப் பெரிதுபடுத்தாமல் மக்களின் பிரச்சினைகளையே கவனித்து வருகிறேன். மக்களுக்கு நானும், எனது நண்பர்களும் சரியாகக் கடமையாற்றுகிறோமா என்பதில்தான் கவனம் செலுத்தி வருகிறேன்.

''எப்படிக் கடமையாற்றினால் தமிழர்களின் வாழ்வு பின்னால் மேன்மையுறும் என்று ஆய்ந்து பணிபுரிகிறோம். நீங்கள் சுட்டிக் காட்டும் குறைபாடுகளை எங்களுக்கு வழிகாட்டுகிறவைகளாக ஏற்போம்.

''நீங்கள் நேரடியாகச் சுட்டிக் காட்டாவிட்டாலும் கூட, கதையாக—வரலாறாக—குறிப்பிட்டுச் சொல்லலாமே!

**கடமைகளைச் செய்யுங்கள் !**

''இந்தச் சமூகத்தில் எதைக் காண்கிறீர்களோ, அதை-அறிவின் மூலம் நிறுத்துப் பார்த்துக் கூறுங்கள்.

''சாதி, பணம் பற்றி கவலைப் படாதீர்கள். உங்கள் எழுத்துதான் இந்த நாட்டை உருவாக்கிடும். உங்களுக்கென்று குடும்பம் இருந்தாலும், அந்தப் பிரச்சினைதான் இங்கும் எதிரொலிக்கிறது என்பதை நினைவில் வைத்து உங்கள் கடமைகளைச் செய்யுங்கள்.

''இந்த நாட்டின் பண்பாட்டை, யாரும் தகர்க்க முடியாத அளவுக்கு உங்கள் எழுத்துக்கள் பயன்பட வேண்டும்.

''ஒரு பக்கம் நீதிபதி-மறு பக்கம் வழக்கறிஞர்-இடையில் நான். இங்கே சமுதாயத்தில் முக்கியத்துவம் வாய்ந்த அனைவரும் கூடியிருக்கிறீர்கள்.

''இந்த உறவுகள் தொடரட்டும்-வளரட்டும்.

''இந்த உறவுகளின் சொந்தக்காரர் இன்னும் பல்லாண்டு எழுத்துச் சேவையாற்றிட என் அன்னையை இறைஞ்சுகின்றேன்.''

# செய்தி ஒலிபரப்புத் துறையில் சிந்திக்க வேண்டியவை!

1977 நவம்பர் 4-ஆம் தேதியன்று புதுடில்லியில் நடை பெற்ற செய்தித் துறை அமைச்சர்களின் 4-வது மாநாட்டில், மாண்புமிகு தமிழ்நாடு செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் ஆற்றிய உரை :

—மாண்புமிகு செய்தி-சுற்றுலா அமைச்சர்

**திரு. ஆர். எம். வீரப்பன்**



தலைவர் அவர்களே! பல்வேறு மாநிலங்களிலிருந்து வருகை தந்துள்ள மதிப்பிற்குரிய என் நண்பர்களே!

மத்திய அரசின் செய்தி-ஒலிபரப்புத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு எல். கே. அத்வானி அவர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சார்பிலும், என் சார்பிலும் முதற்கண் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு அத்வானி அவர்கள் நாட்டின் பொது வாழ்வில் உன்னதமான இடம் பெற்றிருப்பவர்; பாராளுமன்ற விவகாரங்களில் மிகச் சிறந்த அனுபவம் பெற்றவர். அத்துடன் எழுச்சி மிக்க நிர்வாகியாகவும், அரசியல் விவேக மிக்க பண்பாளராகவும் விளங்கி வருகிறார். இவ்வளவு இருந்த போதிலும் அவர் எளிமையே உருக் கொண்டவர். அவரால் அவரது பதவி, கண்ணியமும், பெருமதிப்பும் பெற்றுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு, எனது கருத்துக்கள் சிலவற்றை எடுத்து வைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். மத்தியிலும் மாநிலங்கள் பலவற்றிலும் புதிய அரசுகள் அமைந்து, நாம் முதல் தடவையாக இங்கே கூடியிருக்கிறோம். பல வரலாற்றுப் பின்னணியில், பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம், வெளியீடுகள் போன்றவற்றின் மூலம் மக்களுக்குச் செய்திகளைச் சொல்வதற்கான ஒரு கொள்கையை உருவாக்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.


விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ள குறிப்புச் சம்பந்தமான சில முக்கிய கருத்துக்களை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

### செய்தித் தாள்கள்

மாநிலச் சட்ட மன்றங்கள், நாடாளு மன்றம் ஆகியவற்றின் நிகழ்ச்சிகளைப் பிரசுரிக்கும் உரிமை பத்திரிகைகளுக்கு இருக்க வேண்டும். **தங்கள் பிரதிநிதிகள் என்ன பேசுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளும் உரிமை மக்களுக்கு உண்டு.** இதில் கட்டுப்பாடு இருக்க வேண்டும் என்றால், சட்ட மன்ற, நாடாளு மன்ற விதிமுறைகளின் கீழ் அவைத் தலைவர்கள், நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். இது சம்பந்தமாக விரைந்து நடவடிக்கை எடுப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும்.

### செய்தித் தாள்களுக்குக் கடன் வசதி

செய்தித் தாள்களுக்குக் கடன் வசதி அளிப்பது வரவேற்கத் தக்கதே. எனினும்,



பத்திரிகை நடத்துவது இலாபகரமான தொழி லாக இல்லை. பத்திரிகைகளில் செய்யப்படும் முதலீடு பெரும்பாலும் திரும்பி வராமலே போவதுடன், அவை பெரு நட்டத்தில் மூடப் பட்டு விடுகின்றன.

எடுத்துக் காட்டாகச் சொல்ல வேண்டு மானல், தமிழ் நாட்டில் இரண்டு நாளிதழ் களுக்கு இயந்திரங்கள் வாங்குவதற்காக, தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் கடன்கள் வழங்கப்பட்டன. இந்த இரண்டில், ஒரு நாளிதழ் நட்டத்தில் மூடப் பட்டுவிட்டது. இன்னொரு நாளிதழ் நடந்து வருகிறது என்றாலும், அது கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை. இந்த அனுபவத்திலிருந்து நாம் அறிந்து கொள்வது என்னவென்றால், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான குறைந்தபட்ச உறுதிமொழி கொடுக்கப்பட் டால்தான், செய்தித் தாள்களுக்குக் கடன் வசதி அளிக்கப்பட வேண்டும் என்பதாகும்.

சிறு பத்திரிகைகளுக்குக் கடன் வசதி செய்வதோடு, வேறு வகைகளிலும் உதவ லாமா என்பது பரிசீலனைக்குரியதாகும். எடுத் துக் காட்டாக அரசு வர்த்தகக் கழகத்தின் மூலம் விநியோகிக்கப்படும் பத்திரிகைக் காகி தம் சிறு பத்திரிகைகளுக்கு விலை அதிகமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பெரிய பத்திரிகைகள் வெளி நாடுகளிலிருந்து மொத்த மாக வாங்கிக் கொள்ளுகின்றன. எனவே, சிறு பத்திரிகைகளுக்குக் குறைந்த விலையில், பத்தி ரிகைக் காகிதம் கிடைக்க ஏதாவது வழி செய்யலாம்.

## திரைப்படம்


**திரைப்படம் சமூகத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது. செய்திகளைச் சொல்வதில் அதற் குள்ள சக்தி மகத்தானது. ஆயிரக்கணக் காைேருக்கு வேலையும், அரசுக்கு அதிக அள வில் வருமானமும் தரும் தொழில் இது.** இத்தொழிலுக்கு நியாயம் வழங்கப்படவில்லை. நாடெங்கும் இது நெருக்கடியில் உள்ளது. முக்கியமாகப் பிராந்தியப் படங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தியத் திரைப்படத்தைப் பற்றி எண் ணும்போது, நாம் இந்திப் படங்களையே மனத் தில் கொள்கிறோம். இந்த அடிப்படையில் தான் திட்டங்களும், வரி விதிப்புக் கொள்கை யும் வகுக்கப்படுகின்றன. இந்திப் படங்க ளுக்கு இந்தியா முழுவதிலும், வெளிநாடுகளி லும் ஏராளமான மார்க்கெட் இருக்கிறது. ஒரு இந்திப் படத்திற்கு 40 இலட்சம் ரூபாய் முதல் ஒரு கோடி ரூபாய் வரை முதலீடு செய்யப்படுகிறது. அதே நேரத்தில் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், மராத்தி, வங்காளி போன்ற பிராந்தியப் படங்கள் குறைந்த முதலீட்டில் தயாரிக்கப்படுகின்றன. அவற்றின் இலாபமும் குறைவே. பிராந்தியப் படங்களுக்கு நிதி, வெற்றிவாய்ப்பு சம்பந்த மாக உள்ள இத்தகைய அம்சங்களை நிதி அமைச்சகம் கருதிப் பார்ப்பதாகவே தோன்ற வில்லை என்பதை இங்கே வருத்தத்துடன் குறிப்பிட வேண்டியுள்ளது. இன்று பிராந் தியப் படங்கள், வாய்ப்பும், வசதியும் அதிகம் பெற்றுள்ள இந்தி, மற்றும் வெளிநாட்டுப் படங்களோடு போட்டி போட முடியாமல் தவிக்கின்றன. மத்திய நிதி அமைச்சகத்தின் வரி விதிப்புக் கொள்கையால் அவை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இதனல் ஸ்டுடியோக் கள் மூடப்படுவதும், தொழிலாளர்களும், கலைஞர்களும் வேலையிழப்பதும், நடுத்தர, ஏழை மக்களுக்குப் பொழுதுபோக்கு வசதி இல்லாமல் போவதுமான நிலை உருவாகிறது. இதனல் மாநில அரசின் வருமானமும் பெரு மளவில் குறையும் என்பது எனது கருத்து. இந்தப் பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காண்பது அவசியம்.

## திரைப்படங்கள் மீதான 'எக்ஸைஸ்' வரி


திரைப்படங்கள் மீது 'எக்ஸைஸ் வரி' விதிக்க அண்மையில் செய்யப்பட்ட முடிவு, பிராந்தியப் படங்களைப் பொறுத்த வரை மிக மோசமான விளைவுகளை உண்டு பண்ணும்.

முதலாவதாக, வெளியிடப்பட்ட 12 மாதங்களுக்குப் பிறகு எடுக்கப்படும் பழைய கறுப்பு வெள்ளைப் படத்தின் 'பிரிண்டு'களுக்கு விதிக்கப்படும் 'எக்ஸைஸ்' வரி பெரும் சுமை யாகும். இவ்வளவு காலமாக இவைகளுக்கு 'எக்ஸைஸ்' வரி விதிக்கப்பட்டதில்லை. 1975- இல் வரி விதிக்கப்பட்ட போது கூட, அது பற்றி எடுத்துச் சொன்ன நேரத்தில், சில மாதங்களுக்குப் பிறகு, கறுப்பு வெள்ளை பழை யப் படங்களின் பிரதிகளுக்கு 'எக்ஸைஸ்' வரி விதிப்பிலிருந்து அப்போதைய நிதியமைச் சர் விலக்களித்தார். இந்தச் சலுகை பிராந்



தியப் படங்களுக்காவது உடனடியாக அளிக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதனால் அரசுக்கு அதிக இழப்பு ஏற்பட்டுவிடாது. பழைய படங்களுக்கு 'எக்ஸைஸ்' வரி விதிக்கப்பட்ட பிறகு, திரைப்படச் சுருள்களின் விற்பனை குறைந்து விட்டதாக இந்துஸ்தான் போட்டோ ஃபிலிம் நிறுவனம், இந்திய அரசுக்குத் தெரிவித்திருப்பதையும் நான் இந்த நேரத்தில் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இரண்டாவதாக, படப்பிரதிகளுக்கு 'எக்ஸைஸ்' வரி விதிப்பில் தற்போது கையாளப்படும் முறை பிராந்தியப் படக் கொள்கைக்கு உதவிகரமாக இல்லை. முதல் 12 பிரதிகளுக்கு வரி இல்லை. 13-லிருந்து 24 வரை பிரதிகள் எடுக்கப்பட்டால், பிரதி ஒன்றுக்கு ரூ. 2,500 வசூலிக்கப்படுகிறது. 24 முதல் 36 பிரதிகள் எடுக்கப்பட்டால் பிரதி ஒன்றுக்கு ரூ. 7,500 விதிக்கப்படுகிறது. பிராந்தியப் படத் தயாரிப்பாளர்களுக்கு இது பெரும் சுமையாகும். பொதுவாக, பிராந்திய மொழிகளில் 24 முதல் 36 வரை பிரதிகள் எடுக்கப்படுகின்றன. ரூ. 2,500-லிருந்து ரூ. 7,500 வரை என்று வரியை ஒரேயடியாக உயர்த்தியிருப்பது பெரிதும் பாதிக்கக்கூடியதாகும். இது ரூ. 5,000க்குக் குறைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



## திரைப்பட ஏற்றுமதி

தற்போது 'இம்பெக்' நிறுவனம்இந்தியப் படங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. அதே நேரத்தில், நீண்ட காலமாக இந்தியப் படங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்த தனியார் சிலரும் திரைப்படங்களை ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால், குறிப்பிட்ட 10 நாடுகளுக்கு 'இம்பெக்' நிறுவனம் மட்டுமே ஏற்றுமதி செய்வதாகவும், தனியார் அனுமதிக்கப்படுவதில்லை எனவும் தெரிகிறது. இந்தத் தடை, தனிப்பட்ட ஏற்றுமதியாளர்களுக்கும் படத் தயாரிப்பாளர்களுக்கும் பல சங்கடங்களையும், பிரச்சினைகளையும் தோற்றுவித்துள்ளது. இந்த 10 நாடுகளுக்கு ஏகபோக உரிமை பெற்றுள்ள 'இம்பெக்' நிறுவனம், எல்லாப் படங்களையும் ஏற்றுமதி செய்ய உறுதியளிப்பதாகவும் தெரியவில்லை. எனவே, தனியார் திரைப்படம் ஏற்றுமதி செய்யத் தடையேதும் இருக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். இதில் தவறுகள் நேருமானால், அவற்றைத் தடுக்க, தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். அதை விடுத்து, திரைப்படத் தொழிலின் வளர்ச்சியைத் தடை செய்வது விரும்பத்தக்கது அல்ல.

இந்தியப் படங்களுக்கும், தமிழ்ப் படங்களுக்கும் இலங்கையில் முன்பு நல்ல கிராக்கி இருந்தது. அது இப்போது குறைந்துவிட்டது. மேலும் இலங்கையில் திரைப்பட இறக்குமதி நாட்டுடைமையாக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தியப் படங்களுக்கு-முக்கியமாக, தமிழ்ப் படங்களுக்கு-வழங்கப்படும் தொகை மிகவும் குறைக்கப்பட்டுவிட்டது. பழைய தொகையில் நான்கில் ஒரு பாகம் தான் இப்பொழுது கிடைக்கிறது. இது திரைப்படத் தொழிலைப் பெரிதும் பாதித்திருப்பதுடன், திரைப்பட ஏற்றுமதி மூலம் அரசுக்கு வரும் வருமானத்தையும் குறைத்திருக்கிறது. இலங்கை போன்ற நாடுகளுக்கு திரைப்பட ஏற்றுமதியை 'இம்பெக்' மேற்கொண்டால், அதன் மூலம் அரசும், தொழிலும் பலன் பெறும். இதைச் செய்யாமல், தனியார் உருவாக்கிய மார்க்கெட்டை 'இம்பெக்' ஏகபோகமாக்கிக் கொள்வதால் அரசுக்கோ, திரைப்படத் தொழிலுக்கோ நன்மை ஏதும் விளையாது.

இறுதியாக, இலங்கை அரசோடு வணிக ஒப்பந்தங்கள் மூலம், அந்நாட்டுக்கு அதிகத் திரைப்படங்கள் ஏற்றுமதி ஆகப்பேச்சுவார்த்தைகள் நடத்தி உடன்பாடு காண வர்த்தக அமைச்சகத்தை வலியுறுத்தும்படி மத்திய செய்தி அமைச்சரை நான் கேட்டுக் கொள்கிறேன்.


ஏற்றுமதியாகாத பிராந்திய மொழிப் படங்களுக்கு வண்ணக் கச்சாப் படச் சுருள் வாங்குவதில் மிகுந்த சங்கடங்கள் இருக்கின்றன. வண்ண, மற்றும் கறுப்பு வெள்ளை படச் சுருள்களின் விலைகளைக் குறைக்கவும், இறக்குமதியைச் சற்றுத் தாராளப்படுத்தவும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

## படத் தணிக்கை

அரசு கவனம் செலுத்த வேண்டிய இன்னொரு அம்சம் படத் தணிக்கையாகும். **படத் தணிக்கை, கால மாறுதலுக்கேற்ப இருக்க வேண்டும். சமூகம் அப்படியே இருப்பதன்று. சமுதாய இலட்சியங்கள் மாறிக் கொண்டே இருக்கின்றன. மக்களின் மனப் போக்கைப் புரிந்துள்ளவர்களே தணிக்கைக் குழுவில் இடம் பெற வேண்டும்.** அவர்களும் கூட அவ்வப்போது மாற்றப்பட வேண்டும். அப்பொழுதுதான் இலட்சிய நோக்கில் தேக்கம் இருக்காது. நாம் எத்தகைய வழிகாட்டி விதிகளைப் பிறப்பித்தாலும், இது மிகவும் நுட்பமான விஷயமாகும்.

இந்த நாட்டில், படத் தணிக்கையில் எந்த ஒரு சீரான கொள்கையும் பின் பற்றப்படவில்லை என்பதை நான், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒரு மாநிலத்தின் தற்போதையக் கலாச்சாரத்தின் அடிப்படையில், படத் தணிக்கை செய்யப்படுகிறது என்ற வாதம், நம்முடைய நாட்டைப் போன்றதொரு பெரிய நாட்டில் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. சில மொழிப் படங்களுக்குச் சில சலுகைகள்

காட்டப்படுகின்றன. ஒரு இந்தி அல்லது மலையாளப் படத்தை, அந்த மொழி பேசுகிற மக்கள் மட்டும் பார்ப்பதில்லை. அது நாடு முழுவதும் திரையிடப்படுகிறது. ஒரு இந்தி அல்லது மலையாளப் படத்திற்கு அவர்களது கலாச்சாரம் அல்லது மரபு என்ற போர்வையில் பின்பற்றப்படுகிற நடைமுறை, மற்ற மொழிப் படங்களுக்கு மறுக்கப்படக் கூடாது. இதனால், மற்ற மொழிப் படங்கள் வர்த்தக ரீதியில் மார்க்கெட்டில் போட்டியிட முடியாமல் அழிந்துவிட நேரிடும். இது மட்டுமல்லாமல், அந்நியப் படங்களைத் தணிக்கை செய்வதில் காட்டப்படும் பாரபட்சம், இந்த நாட்டின் பிராந்திய மொழிப் படங்களை வர்த்தக ரீதியில் பாதித்துள்ளது. எனவே, ஒரு பிராந்தியத்தின் கலாச்சார உணர்வினை மதிக்கும் அதே நேரத்தில், திரைப்படத் தொழிலுக்குப் பொருளாதார வகையில் உதவக் கூடிய தணிக்கை முறைக் கொள்கை ஒன்றை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது சம்பந்தமாகப் பிராந்தியத் திரைப்படத் தணிக்கைக் குழுக்களுக்கு ஆலோசனைக் குழு அங்கத்தினர்களை நியமிப்பது பற்றி மாநில அரசுகளுக்கு உள்ள குறைபாட்டை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.




ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படும் பொழுது, மாநில அரசுகள் கலந்து கொள்வதில்லை. திரைப்படத் தணிக்கைக் குழுக்கள், சட்டப்படியான அமைப்புக்களாக இருந்தாலும் மாநில அரசுகளோடு கருத்துப் பரிமாற்றத்திற்கு வகை செய்யலாம். இதற்காக அவசியமானால், சட்ட விதிகளைத் திருத்தம் செய்யலாம்.

படத் தயாரிப்பு விதி முறை தெளிவில்லாமல் இருக்கிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக அதற்கு விளக்கமளிக்கிறார்கள். திரைப்படங்களில், பல்வேறு பொருள்களைப் படைப்பதில், எவ்வளவு தூரம் செல்லலாம் என்பது குறித்து தெளிவாக—திட்டவட்டமான—வழிகாட்டி நெறிமுறைகள் படத்தயாரிப்பாளர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். இந்தக் கொள்கையில், திரைப்படத் தொழில் துறையினரைக் கலந்து கொண்டு அவ்வப்பொழுது மாற்றங்கள் செய்வதும், அதுபற்றி அவர்களுக்கு முன்னதாகவே சரியாக எடுத்துச் சொல்வதும் அவசியமாகும்.

படத் தணிக்கை செயல்படுவதில் சென்னை சம்பந்தப்பட்ட வரை தற்போது உள்ள சில சங்கடங்களை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சென்னையிலுள்ள பிராந்திய அலுவலகம் ஆண்டொன்றுக்கு பல்வேறு மொழிகளைச் சார்ந்த 250 திரைப்படங்களை இரண்டே அலுவலர்களின் துணை கொண்டு தணிக்கை செய்ய வேண்டியுள்ளது. இதனால் படத் தணிக்கைச் சான்றிதழ் பெறுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, இந்த அலுவலகங்களை விரிவுபடுத்தலாம். மொழி மாற்றம் செய்யப்படும் படங்களைப் பொறுத்த வரையில், வசனம், பாட்டு தவிர படமே மீண்டும் தணிக்கை செய்யப்பட வேண்டிய அவசியமில்லை. பிராந்தியக் குழுவுக்கு எதிராக மேல்முறையீடு செய்ய, ஒரு மன்றமும், அதற்குமேல் நீதி மன்றமும் என்ற வகையில் இருக்க வேண்டும்.

அண்மை மாதங்களில் தணிக்கைச் சான்றிதழ் பெற மறுபதிவு 'பிரிண்டு'களுடன் முதல் 'பிரிண்டை'யும் அங்கத்தினர்களுக்குக் காட்ட வேண்டுமென்று படத் தயாரிப்பாளர்கள் வற்புறுத்தப்படுகிறார்கள். இதனால் காலதாமதம் ஏற்படுவதால் 'பிரிண்ட்' எடுத்த பிறகு சொல்லப்படும் மாற்றங்களைச் செய்வதில் பெரும் பொருள் இழப்பும் ஏற்படுகிறது. எனவே மறுபதிவுப் 'பிரிண்டு'களைக் காட்டும் வழக்கத்தையே தொடர்ந்து கடைப்பிடிக்கலாம். மேலும், சான்றிதழ் வழங்குவதில் பிராந்திய அலுவலகத்திற்கு இன்னும் அதிக அதிகாரங்கள் இருக்க வேண்டும்.




## வானொலியும், தொலைக்காட்சியும்

வானொலி சிற்றூர்களையும் எட்டக்கூடிய நிலையில் இருப்பதால், மத்திய, மாநில அரசுகளின் வளர்ச்சிப் பணிகளை மக்களுக்கு விளக்கிச் சொல்வதில் அது பயனுள்ள வகையில் பணியாற்ற முடியும். வானொலி மத்திய அரசுக்குச் சொந்தமாக இருந்தபோதிலும், பிராந்திய மக்களுக்குச் செய்தி விளக்கம் அளிக்கும் பணியை அது மேற்கொள்ளவேண்டும். வானொலிமூலம், திட்டங்களைப் பயனுள்ள முறையில் அமலாக்குவதில் மாநில அரசுகளின் பங்கை நான் விரித்துரைக்க விரும்பவில்லை. உள்ளூர் மக்களின் உணர்ச்சிகளைக் கருத்தில் கொள்வதன் மூலம், இயற்கை விபரீதங்கள், கலகங்கள் ஏற்படும் பொழுது, வானொலி மகத்தான பணியாற்றும். வானொலி மாநில அரசுகளுடன் ஒருங்கிணைந்து பயனுள்ள வகையில் திறம்படப் பணியாற்றுவதற்குத் தெளிவான கொள்கையொன்றை உருவாக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்தைப்

பொறுத்த வரை, இன்னும் சில பகுதிகள் வானொலியின் ஒலிபரப்பு வரம்புக்குள் வராமலிருக்கின்ற காரணத்தினால், செய்திகள் பயனுள்ள வகையில் சென்று எட்ட, தற்போது உள்ள வானொலி நிலையங்களை உடனடியாக மேலும் வலுப்படுத்த வேண்டும் என நான் எண்ணுகிறேன். சென்னை 'ஏ' நிலையத்தின் ஒலிபரப்புச் சக்தியை 20 கி.வா.விருந்து, 300 கி.வா.ஆகவும் சென்னை 'பி' நிலையத்தின் ஒலிபரப்புச் சக்தியை ஒரு கி.வா.விருந்து 20 கி.வா.ஆகவும், அதிகரிக்க வேண்டும் என்று நான் கூற விரும்புகிறேன். மதுரை மாநகரம், தமிழகத்தின் மத்தியில் அமைந்துள்ள முக்கியமான ஒரு பெரு நகராகும்; அங்கு ஒரு 50 கி.வா. வானொலி நிலையம் அமைக்கப்பட வேண்டியது மிக மிக அவசியமாகும்.

சென்னை தொலைக்காட்சி நிலையத்தைப் பொறுத்த வரை, அதன் ஒளிபரப்பு எல்லைக்குள் சென்னை மாநகரமும், செங்கற்பட்டு மாவட்டமும், வட-தென் ஆர்க்காடு மாவட்டத்தின் சில பகுதிகளும் மட்டுமே வருகின்றன. விவசாய முக்கியத்துவம் உள்ள தஞ்சை, திருச்சி மாவட்டங்களின் சிற்றூர்களும் தொலைக்காட்சி வசதியைப் பெறும் வகையில்



மதுரையில் ஒரு தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையத்தை நிறுவலாம். அங்கு 10 கி. வா. 'டி.வி. டிரான்ஸ்மிட்டரும்', 150 மீட்டர் 'டி.வி.' கோபுரமும், மூன்று ஓரங்குல 'வீடியோ டேப் ரிக்கார்டர்களும்' (Video tape recorders) ஏற்படுத்தலாம். இதனால், ஒரு கோடி மக்கள் பயன் பெறுவர். இது இல்லாவிட்டால், 1 கி. வா. டி. வி. டிரான்ஸ்மிட்டரும், 100 மீட்டர் கோபுரமும், 3 ஓரங்குல 'வீடியோ டேப் ரிக்கார்டுகளும்' அமைக்கலாம். இவை எடுத்துக்கொள்ளப்பட்டால், தெற்கே முழு வசதிகள் கொண்ட 'எஞ்சினியரிங்' பிரிவு ஒன்று இருக்க வேண்டும். ஏற்கனவேயுள்ள நிலையத்தின் பராமரிப்பு, தொழில் நுட்ப அலுவலர்கள் கிடைப்பதைச் சார்ந்து செயல்படக் கூடியதாக உள்ளது. இந்தப் பின்னணியில்தான், சென்னையிலுள்ள 'எஞ்சினிரியங்' பிரிவை, டில்லிக்கு மாற்றும் முயற்சி உதவிகரமாக இருக்காது என்று மாநில அரசு கருதுகிறது. இது பற்றி, ஏற்கெனவே நாங்கள் உங்களுக்கு எழுதியிருக்கிறோம். சென்னையிலிருந்து 'எஞ்சினியரிங்' பிரிவை மாற்ற வேண்டாம் என்று மீண்டும் நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

வானொலியையும், தொலைக்காட்சியையும் தன்னாட்சி உரிமையுள்ளனவாகச் செய்வது பற்றிய எங்கள் கருத்துக்களை நாங்கள் பி.ஜி. வர்க்கீஸ் குழுவிற்கு அனுப்பியுள்ளோம். அது சம்பந்தமாக, இங்கே நான் உங்கள்நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை.

## வெளியீடுகள்

'வேலைவாய்ப்பு'—இதழ் பிராந்திய மொழிகளில் கொண்டு வருவது பற்றி நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். வாய்ப்பு நேருகின்ற இடங்களில், வேலைவாய்ப்பு இதழைத் தமிழக அரசு பயன்படுத்தி வருகிறது. நாங்கள் தொடர்ந்து அவ்வாறு செய்வோம். இதை, வர்த்தக ரீதியில் ஆன வெளியீடாக மட்டும் கருதக் கூடாது. வேலைவாய்ப்பு கிடைக்காமலிருக்கும் ஏழை இளைஞர்களுக்கு உதவி அளிப்பதை அது நோக்கமாய்க் கொண்டுள்ளது. மானிய உதவி பெறும் வெளியீடாகக் கூட அது தொடர்ந்து இருப்பது அவசியம். அதன் விற்பனைக்கான முயற்சிகள் போதிய அளவில் மேற்கொள்ளப்படவில்லை என்று நான் கருதுகிறேன். மொழிப் பதிப்புக்களை தொடர்ந்து வெளியிடுமாறும், விற்பனைக்கும் விளம்பரத்திற்கும் தீவிர இயக்கம் ஒன்றை ஆரம்பிக்குமாறும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

## தேசீய இயக்கங்கள்

பெரிய தேசீய இயக்கங்களுக்கான உங்களது கருப்பொருள்களை நான் வரவேற்கிறேன். இம்மாதிரியான எல்லா இயக்கங்களிலும் தமிழக அரசு ஒத்துழைக்கும். இவை வெற்றிகரமாகச் செயலாற்றப்படுவதற்கு மத்திய அரசு நிதியுதவி வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். ம்த்திய அரசின் பாடல் மற்றும் நாடகப் பிரிவு தென்புலத்தைச் சேர்ந்த தேசீயத் தலைவர்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் சிறப்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன். சென்ற ஆண்டில் அவர்கள் கவி சுப்பிரமணிய பாரதியின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் ஒலி—ஒளிக் காட்சியை ஏற்பாடு செய்திருந்தார்கள். அது மகத்தான வெற்றி கண்டது. தற்போது இந்தப் பிரிவின் ஒரு குழு சென்னையில் இருப்பதால், தேசிய ஒருமைப்பாடு பற்றிய நாடகங்களை அவர்கள் உருவாக்குவார்கள் என்று நான் நம்புகிறேன்.

மத்திய அரசு அளித்து வரும் எல்லா வகையான ஒத்துழைப்புக்கும் உதவிக்கும் நாங்கள் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம்.

நன்றி. வணக்கம்.

# பல்லவன் போக்குவரத்துக் கழகம் லிமிடெட் [பெருநகர்ப் பிரிவு]

அண்ணாசாலை : : சென்னை—600 002

*பல்லவன் போக்குவரத்துக் கழகம், தனது பேருந்துகளில் பயணம் செய்யும் பொதுமக்களுக்குப் பின்கண்ட சலுகைகளை வழங்குகிறது.*

- ❋ இரு கண்களிலும் முழுஅளவில் பார்வை இழந்தவர்கள் நகர எல்லைக்குள் பயணம் செய்ய "இலவச அனுமதிச் சீட்டுகள்" (FREE PASS) வழங்குதல்.
- ❋ முடமானவர்களும், புற்றுநோய்ப் பிணியாளர்களும் சிகிச்சை பெறுவதற்காகத் தங்கள் இல்லத்திலிருந்து மருத்துவமனைக்குச் செல்லவும், மருத்துவமனையிலிருந்துத் திரும்ப இல்லத்திற்குச் செல்லவும் "இலவச அனுமதிச் சீட்டுகள்" வழங்குதல்.
- ❋ அன்றாடம் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து புறப்பட்டு குறிப்பிட்ட இடம் சென்று பணியாற்றிவிட்டுத் திரும்புகின்றவர்களுக்கு 1/3 சலுகை விகிதத்தில் "மாதாந்திர பருவப் பயணச்சீட்டு" வழங்குதல்.
- ❋ மாணவர்கள் தங்கள் இல்லத்திலிருந்து கல்வி நிலையங்களுக்குச் செல்லவும், கல்வி நிலையங்களிலிருந்துத் திரும்ப இல்லத்திற்குச் செல்லவும் 1/2 கட்டணத்தில் (கட்டணம் திருத்தப்படுவதற்கு முந்திய விகிதத்தில்) மாணவர்களுக்குச் சலுகைப் பயணச் சீட்டு வழங்குதல். மேலும், எல்லா வழித்தடங்களிலும் மாணவர்கள்—மாலைநேரக் கல்லூரி மாணவர்கள் உட்பட—கல்வித் தொடர்பான பணிகளுக்காகப் பயணம் செய்வதற்காக, "15 ரூபாய் பருவப் பயணச் சீட்டு" வழங்குதல்.

*மேலும் விவரங்கள் அறிய தயவுசெய்து பின்கண்ட அலுவலரை நேரில் தொடர்பு கொள்ளலாம்.*


மக்கள் தொடர்பு அலுவலர்,
பல்லவன் போக்குவரத்துக் கழகம் லிமிடெட்,
[பெருநகர்ப் பிரிவு],
அண்ணாசாலை, சென்னை—600 002

*அல்லது தொலைபேசி மூலமாகப் பின்கண்ட எண்களுக்குத் தொடர்பு கொள்ளலாம்.*

**846980,**
**846063**—எக்ஸ்டென்ஷன்—36

சி. ஏ. ஸ்ரீனிவாசன்,
நிருவாக இயக்குநர்.

Advt. டிஐபிஆர். 54792/77



# பால்வளத் துறையின் பாங்கான பணிகள்!

மாண்புமிகு
வேளாண்மைத் துறை அமைச்சர்
**திரு. ப. குழந்தைவேலு**



இயற்கை அளித்துள்ள முழுமையான சிறந்த உணவாகப் பால் கருதப்படுகின்றது. மனித உடல் நலமுடனும், வளமுடனும் இருப்பதற்குத் தேவையான எல்லாவகைச் சத்துப் பொருள்களும் இதன்கண் உள்ளன. உழவர்கள் பயிர்த்தொழிலை முக்கியமாகக் கொண்டிருப்பினும், பாற் பண்ணை அவர்களது துணைத் தொழிலாகத் தொடர்ந்து இருந்து வருகிறது.

தமிழ்நாட்டில் கறவை மாடுகள் ஒவ்வொன்றும் சராசரி கொடுக்கக்கூடிய பால் அளவும், நபர்வாரியாக நுகரும் பால் அளவும் உயர்ந்த தரத்தை அடையவில்லை. ஒரு மனிதனுக்குரிய சமநிலை உணவுக்கு, நாளொன்றுக்கு 300 கிராம் பால் தேவைப்படுகிறது. அனைத்து இந்திய அடிப்படையில் நபர் வாரியாகக் கிடைக்கும் சராசரி பால் அளவு 130 கிராம். ஆனால், கால்நடை வளர்ப்புப் பற்றிய செயற் குழு மதிப்பீட்டின்படி, தமிழ்நாட்டில் நபர் வாரியாகக் கிடைக்கும் பால் அளவு 63 கிராம் மட்டுமே ஆகும்.

ஆகவே குடியானவர்களுக்கு உகந்த, தனித்துச் செயல்படக்கூடிய ஒரு தொழிலாக பாற் பண்ணையை உருவாக்குவதற்காகவும், மக்களின் உணவில் சத்துக் குறைவை ஈடு செய்வதற்காகவும் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.

மாதவரத்தில் உள்ள கால்நடைக் குடியிருப்புக்கும், பாற்பண்ணைக்கும் பால் வளத்துறை பொறுப்பேற்றுள்ளது. தமிழ்நாட்டில் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் ஏனைய பாற்பண்ணை வளர்ச்சி நடவடிக்கைகளையும் இத்துறை கவனித்து வருகிறது. ''பால் பெருக்குத் திட்டத்தின்கீழ்'' இம்மாவட்டங்கள் அடங்கா.

செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர், தருமபுரி நீலகிரி, மதுரை ஏனைய 8 மாவட்டங்கள் "பால் பெருக்குத் திட்டத்தின்" கீழ் வருகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுப் பால் வழங்கு சங்கங்கள்-ஒன்றியங்கள் அனைத்தின் நடவடிக்கைகளையும் மேற்பார்வையிடும் பொறுப்பும் இத்துறைக்கு வந்துள்ளது.

## பால் பெருக்குத் திட்டம்

உலக உணவு நிறுவனத்தின் 618-ஆம் எண் திட்டம் ''பால் பெருக்குத் திட்டம்'' என அழைக்கப்படுகிறது. இத்திட்டம், பால் உற்பத்திச் செலவைச் சிக்கனப்படுத்திச் சீராக்கவும், கிராமங்களில் கிடைக்கும் பாலை வாங்கிப் பதப்படுத்தி, பம்பாய், கல்கத்தா, டெல்லி, சென்னை போன்ற பெரிய நகரங்களில் விற்பனை செய்வதற்காகவும் வகுக்கப்பட்ட ஒரு பாற்பண்ணை வளர்ச்சி ஒருங்கிணைப்புத் திட்டமாகும்.

பால் வழங்குதலைப் பரவலாக விரிவுபடுத்தி மக்கள் வாங்கும் சக்திக்கேற்ற விலையில் அதனை விற்பனை செய்வதற்காக, உலக உணவு நிறுவனத்தால் நன்கொடையாக வழங்கப்படும் ஆடை நீக்கிய பால் பொடியையும், வெண்ணெய்யையும் பயன்படுத்துவதுதான் இத்திட்டத்தின் நோக்கமாகும்.


உலக உணவு நிறுவனத்தின் உதவி, ஆடை நீக்கிய பால் பொடி வடிவிலும், வெண்ணெய் வடிவிலும் அமைகிறது. பால் உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு, நான்கு பெருநகர் பாற் பண்ணைகளில் இவை பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தப் பொருட்களின் விலைமதிப்பு, பால் உற்பத்தி, பெருக்கம், பாற்பண்ணைகள் நிறுவவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேலே சொல்லிய பொருட்களைப் பயன்படுத்திப் பாலை வேண்டிய அளவுக்குத் தொடர்ந்து அளிப்பதற்கு ஏற்ப செய்முறைப் பதன வசதிகள் கூடுதலாகச் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இத் திட்டத்தின் கீழ் நிதி உதவி 70 சதவீதம் கடனாகவும், 30 சதவீதம் மானியமாகவும் கிடைக்கிறது. தமிழ்நாட்டுக்கு ரூ. 887 இலட்சம் முதலில் ஒதுக்கப்பட்டது. இதில் ரூ. 475.86 இலட்சம் இதுவரை கொடுக்கப்பட்டுள்ளது. 1976-77-ஆம் ஆண்டின் முடிவில் ரூ. 470.71 இலட்சம் செலவிடப்பட்டது.

தமிழ்நாடு பால்வள நிறுவனம், பாலைக் கொள்முதல் செய்து, செய்முறைப் பதப்படுத்தி, சென்னை, மதுரை மாநகரங்களுக்கு விற்பனை செய்வதையும், பால் பெருக்குத் திட்டத்தைச் செயல்படுத்துவதையும், ஏற்றுள்ளது. தமிழ்நாட்டில் பால் உற்பத்தி அளவை உயர்த்துவதில், கிராமங்களில் பரவலாக அமைந்துள்ள பால் கூட்டுறவுகள் குறிப்பிடத்தக்க பணியினைச் செய்து வருகின்றன.

## ஆனந்த் பாணிச் சங்கங்கள்

பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் 'ஆனந்த்' பாணியில் அமைக்கப்பட்ட புதிய வகை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ளன. இது வரையில் 1,133 சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்களின் சிறப்பு அம்சங்களாவன:



எர்த்தாங்கல் கிராம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் அவர்கள், உறுப்பினர்களுக்குப் பணம் வழங்குகிறார்.

(அ) முன்பு அமைக்கப்பட்டு வந்த சங்கங்களில், பாலின் அளவின் அடிப்படையில் மட்டும் பணம் செலுத்தப்பட்டு வந்தது. இதற்கு மாறாகப் புதிய சங்கங்கள் அந்த இடத்திலேயே ஒவ்வொருவர் தரும் பாலில் கொழுப்புச் சத்து எவ்வளவு என்று முடிவு செய்து, அதன் அடிப்படையில் பாலுக்குப் பணம் கொடுக்கப்படுகிறது.

(ஆ) சங்கங்கள் கடனை மையமாகக் கொண்டதல்ல.

(இ) இச்சங்கம் உற்பத்தியாளர் நலனை ஆதாரமாகக் கொண்டதாகும்.

(ஈ) உள்ளூர் விற்பனையில் இது ஈடுபடுவதில்லை.

(உ) பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக, கால்நடை மருத்துவப்பணி, செயற்கை முறைக் கருத்தரிப்பு, கால் நடைச் சமநிலைத் தீவனம் முதலிய அடிப்படை வசதிகள், உறுப்பினர்கள் இருப்பிடங்களிலேயே செய்து கொடுக்கப்படுகின்றன.

(ஊ) இத்தகைய உற்பத்தியாளர்கள் சங்கங்களின் செயலாளர்கள், செயற்கைக் கருத்தரிப்புப் பணி செய்யும் முறையில் பயிற்சி அளிக்கப்படுகின்றனர்.

(எ) உற்பத்தியாளர் சங்கங்கள் அமைப்பதற்கும், பாரம்பரியமாக உள்ள சங்கங்களை 'ஆனந்த்' பாணியில் மாற்றியமைப்பதற்கும் முன் ஆய்வுப் பணியும், சிக்கன முறையில் பால் சேகரிப்பு மார்க்கங்களை நிர்ணயிப்பதும் அவசியமாகும்.

பால் வள நிறுவனத்தின் செலுத்தப் பட்ட பங்கு மூலதனம் ரூ. 137.96 இலட்சமாகும். தமிழ்நாடு அரசிடமிருந்து பால்வள நிறுவனம் எடுத்துக் கொண்ட சொத்துக்களின் மதிப்பு ரூ. 241 இலட்சமாகும்.

1975-76-ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் மொத்த வியாபாரத் தொகை ரூ. 13 கோடியாக இருந்தது. இது 1976-77-ல் ரூ.22 கோடியாக உயர்ந்தது. 1977-78-ல் ரூ. 25 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**1977-78-ஆம் ஆண்டு திட்ட நிதி ஒதுக்கத்தில் கீழ்க்காணும் முக்கிய திட்டப் பணிகளை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது :-**

(அ) மேலும் குளிர்பதன வசதி தேவையில்லாமல் பாலை நீண்ட காலத்திற்குத் தரமாக வைத்திருக்கும் பொருட்டு, பாலைப் பதம் செய்யும் நவீன இயந்திரம் ஒன்றை நிறுவுதல்; இந்த இயந்திரம் 10,000 லிட்டர் உற்பத்தித் திறன் கொண்டதாக இருக்கும். தற்போது திருநெல்வேலியில் பாலைப் பதம் செய்யும் இயந்திரம் ஏதும் இல்லாததால், இந்த இயந்திரத்தை அங்கு நிறுவக் கருதப்பட்டுள்ளது.

(ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்ட கொள்முதல் குழுவுக்குக் கூடுதலாக உற்பத்தியாளர்கள் சங்கங்களை அமைப்பதற்காக, மேலும் இரண்டு மாவட்டங்களில் கொள்முதல் குழுக்களை அமைக்கக் கருதப்படுகிறது.


(இ) திருச்சிராப்பள்ளி, மற்றும் இரு மாவட்டங்களில் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக, 1977-78-ஆம் ஆண்டில் 3 நடமாடும் கால்நடைப் பிரிவுகள் தொடங்கப்படும்.

(ஈ) தோராயமாக இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் 4,000 லிட்டர் பால் உற்பத்தித் திறன் கொண்ட குளிர்பதன நிலையம் ஒன்று திருநெல்வேலி மாவட்டம் நாங்குனேரியில் அமைக்கப்படும்.

**1977-1978-ஆம் ஆண்டிற்காக அங்கீகாரம் பெற்ற நிதி ஒதுக்கீடு பற்றியவை விவரம் பின்வருமாறு :**

| | 1977-78 வரவு செலவு திட்டத்தின் மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| பால் கொள்முதல் திட்டம் | 2.97 |
| அரசு, பால் பண்ணைக்குச் சாதனங்கள் வாங்குதலும், கட்டடங்கள் கட்டுதலும் | 0.77 |
| கால்நடை மருத்துவ ஊர்திப் பிரிவு நிறுவுதல் | 2.20 |
| சென்னையிலுள்ள அரசுப் பாற் பண்ணையை விரிவுபடுத்தல் | 2.26 |
| கலப்பினக் கால் நடைகளின் இரத்தத்தில் உள்ள சிவப் பணு (ஹீமோகுளோபின்) குறித்த ஆராய்ச்சி | 0.12 |

எர்த்தாங்கல் கிராம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து பால் அனுப்பப் படுகிறது.



| | |
|---|---|
| தொழில்நுட்ப வசதித் திட்டம் | 0.02 |
| துறை அளவிலான குளிரவைக்கும் நிலையம் | 2.00 |
| பாலை முறைப்படிச் சூடாக்கிச் சுத்தம் செய்யும் நிலையம் தொடங்குதல் | 5.00 |
| மொத்தம் | 15.34 |

கூட்டுறவு


| | |
|---|---|
| பால்வழங்கு சங்கங்களின் பங்கு மூலதனத்திற்கு நிதி உதவியும், கால்நடைகள் வாங்குவதற்குக் கடனுதவியும் | 22.00 |
| வாகனங்கள் வாங்குவதற்குக் கடன் | 2.00 |
| பால் வழங்கு சங்கங்களின் நிர்வாக தொழில் நுட்பப் பணியாளர் வகையில் இச்சங்கங்களுக்கு உதவித் தொகை | 0.73 |
| | 24.73 |
| பால் பண்ணை வளர்ச்சிக்கு கூடுதல் மொத்தம் | 40.07 |

மேலே கூறப்பட்ட விவரங்கள், திட்டப் பணிகளுக்கென்று ஒதுக்கப்பட்ட செலவாகும். 1977-78-ஆம் ஆண்டில், கோரிக்கை எண்கள் 10-ன் கீழும், 56-ன் கீழும், திட்டத்தின் கீழ் வராத பணிகளின் கணக்கில் ரூ. 95.36 இலட்சம் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பால் பண்ணைப் பராமரிப்பிற்கான செலவு ஆண்டுக்கு ஆண்டு அதிகரிப்பதால், திட்டத்தின்கீழ் வராத பணிகளின் செலவும் அதிகரிக்கின்றது. ஆகையால் 1977-78-ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் மொத்தச் செலவு ரூ. 135.43 இலட்சமாகும். இத்தொகை மலைப்பகுதி வளர்ச்சித் திட்டம், மேற்கு மலைப்பகுதி வளர்ச்சித் திட்டம், அரிசன நலத் திட்டம் ஆகிய சிறப்புத் திட்டங்களுக்கென்றே ஒதுக்கப்பட்டதாகும்.

## பால் சேகரித்தலும், செய்முறைப் பதப்படுத்தலும்

தமிழ்நாடு பால் வள நிறுவனம், சராசரியாக ஒரு நாளைக்கு, 2 இலட்சம் லிட்டர் பால் சேகரிக்கின்றது. 1976-77-ஆம் ஆண்டில், அதிக அளவு பால் கிடைக்கும் காலங்களில், நாள் கொள் முதல் 2.60 இலட்சம் லிட்டராகும். குறைந்த அளவு பால் கிடைக்கும் காலங்களில், ஒரு நாளைய்க் கொள்முதல் 1.26 இலட்சமாகும்.

சென்னை, மதுரை பால்பண்ணைகள், 4.5 சதவீதக் கொழுப்பும், 8.5 சதவீதக் கொழுப்பற்ற திண்மைப் பொருளும் ( S.N.F. ) அடங்கிய தரப்படுத்தப்பட்ட பாலை விற்பனை செய்கிறது. சென்னை மாநகரத்தில் 3 சதவீதம் கொழுப்பும், 8.5 சதவீதக் கொழுப்பற்ற திண்மைப் பொருளும் அடங்கிய, 15,000 லிட்டர் கொழுப்புச்சத்து குறைக்கப்பட்ட பாலும் ( Toned Milk ) விற்பனையாகின்றது. குறைந்த அளவு பால் கிடைக்கும் காலங்களில், வெண்ணெய் மற்றும் பால்பொடி சேர்த்துப் பால், பதப்படுத்தப்படுகிறது. அதிக அளவு பால் கிடைக்கும் காலங்களில், குறைந்த அளவு ஆடைநீக்கப்பட்ட பால் பொடியே சேர்த்துப் பால் பதப்படுத்தப்படுகிறது.



பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் பால்மாடுகளுக்குத் தற்பொழுது நல்ல மருத்துவச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

குளிர்காலம், மாடுகள் கன்று ஈனும் காலமாதலால், நவம்பர் முதல் மார்ச் வரையில் (அதிகப் பால் கிடைக்கும் காலம்) மற்ற மாதங்களை விடப் பால் உற்பத்தி பெரும்பாலும் இரு மடங்காக உள்ளது. பருவ கால ஏற்ற இறக்கங்கள் இருந்த போதிலும், விற்பனை ஒரே சீராக இருக்க வேண்டியது அவசியமாகிறது. பால் குறைந்த அளவே கிடைக்கும் காலங்களில், பாலின் தேவையை நிறைவு செய்வதற்கும், பால் மிகுதியாகக் கிடைக்கும் காலங்களில் பாலின் கொழுப்புச் சத்தை தரமான நிலையில் அமைப்பதற்கும், ஆடை நீக்கப்பட்ட பால் பொடி, வெண்ணெய் ஆகியவை தேவைப்படுகின்றன. அதிக அளவு பால் கிடைக்கும்பொழுது, அது 'மதுரை பால் பவுடர் நிலையத்திற்கு' அனுப்பப்படுகின்றது. அங்கு பாலை, ஆடை நீக்கப்பட்ட பால் பொடியாகவும், வெண்ணெய், நெய்யாகவும் மாற்றுவதற்கான வசதிகள் உள்ளன.

## பால் விற்பனை

சென்னை மாநகரில் பால் விற்பனை, 1972-73-ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 80,750

லிட்டராக இருந்தது; தற்போது 2,20,000 லிட்டராகக் குறிப்பிடத்தக்க வகையில் உயர்ந்துள்ளது; இதனல் ஒரு இலட்சம் மக்கள் பயனடைகின்றனர்.

## தொழில் நுட்ப வசதி வழங்குதல்

பசுக்களின் தீவிரக் கலப்பின உற்பத்தி, எருமைகளின் தரத்தை உயர்த்துதல் ஆகிய வற்றுக்காகப் பால் பண்ணை வளர்ச்சிக் கழகம், புதிய திட்டங்களைச் செயலாக்குவதுடன், கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்குத் தேவையான கால்நடைத் தீவனம், தழை உணவு வசதி, மருத்துவ உதவி போன்ற பிற தொழில் நுட்ப வசதிகளையும் அளிக்கின்றது. கால்நடை மருத்துவப் பணிகள் உறுப்பினர் களது இல்லங்களிலேயே அளிக்கப்படுகின்றது. மேலும், அவர்களுக்குக் கிடாரிக் கன்றுகளை வளர்ப்பதற்கும், மாட்டுத் தீவனத்தை உற் பத்தி செய்வதற்கும் உதவித் தொகை அளிக் கப்படுகின்றது.

பால்பண்ணைக் கழகம், ஊட்டியில், 'பொலி காளை-தாய்ப் பண்ணையில்' அயல் இன ஜெர்ஸி மாட்டு மந்தை ஒன்றையும், எட்டு, செயற் கைக் கருத்தரிப்பு நிலையங்களையும், பரா மரித்து வருகின்றது. இவையன்றி, 27 நட மாடும் கால்நடை மருத்துவமனையும், 9 அவ சரகால மருத்துவப் பிரிவுகளையும், நடத்து கின்றது. இவற்றில் 67 கால்நடை மருத்து வர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.


மாதவரம் கால் நடைத் தீவனத் தயா ரிப்பு ஆலை, தற்போது, திங்களொன்றுக்குச் சராசரியாக 1,000 டன் கால் நடைத் தீவனம் உற்பத்தி செய்கின்றது. மாநிலத்திலுள்ள, கால்நடை பராமரிப்புத் துறையின் பண்ணை களுக்குக் கால்நடைத் தீவனம் வழங்கும் பொறுப்பு பால் வள நிறுவனத்தினிடம் உள் ளது. 1,300 டன் அளவு பால் விற்பனைப் பொறுப்பை நிறைவு செய்வதற்காகக் கால் நடைத் தீவன உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு, வட ஆர்க்காடு மாவட்டத்தின் ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் கால் நடைத் தீவன உற்பத்தி ஆலையை, இந்நிறுவனம் குத்தகைக்கு எடுத்துள்ளது. சில மூலப் பொருட்களின் தட்டுப்பாடு, பெரிதும் வேறுபடுகின்ற விற்பனை நிலவரங்கள் ஆகிய இரு முதன்மைப் பிரச்சனைகளை, இந்நிறுவனம் எதிர்நோக்க வேண்டியுள்ளது. ஆதாயமோ, விரயமோ இன்றி, கால் நடைத் தீவனம், பால் பண்ணை வைத்திருக்கும் உழவர்களுக்கு வழங்கப்படுகிறது.

## விரிவாக்கம்

''பால் பெருக்குத் திட்டத்தின் கீழ்'' மாதவரம் நிலையத்தின் பால் பதப்படுத்தப் படும் திறன், ரூ. 21 இலட்சம் செலவில் 50,000 லிட்டரிலிருந்து 1,25,000 லிட்ட ராக அதிகரித்துள்ளது. மூன்று கோடி ரூபாய் செலவில், நாளொன்றுக்கு 2,00,000 லிட்டர் திறனுடைய புதிய நிலையம் ஒன்று அம்பத்தூரில் (சென்னை) 16-4-1976 முதல் செயல்படத் தொடங்கியுள்ளது. இப்புதிய நிலையம், மொத்த விற்பனை அடிப்படையில் அமைக்கப்பட்டது. 1977-78-ஆம் ஆண்டில், ஒரு மணி நேரத்திற்கு 5,000 பைகளை நிரப் பும் திறனுடைய இரண்டு இயந்திரங்கள் இங்கு நிறுவப்படவிருக்கின்றன. மதுரையில் ரூ. 90 இலட்சம் செலவில் அமைந்த, நாளொன்றுக்கு 10 டன் பால் பொடி தயா ரிக்கும் திறனுடைய, பால்பொடி தயாரிக்கும் நிலையமொன்று நிறுவப்பட்டுச் செயல்பட்டு வருகின்றது.

கோயம்புத்தூர் ஒன்றியத்திலுள்ள பால் பதப்படுத்தும் நிலையத்தை விரிவு

வடஆர்க்காடு மாவட்டம், திமிரி வட்டாரம் காவனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு சசிதரன் என்ற பட்டதாரி பால்பண்ணையாளருக்கு, வேலூர் மண்டல உதவித் திட்ட அலுவலர் மானிய விலையில் கால்நடைத் தீவனத்தை வழங்குகிறார்.





நாட்டுப் பசுவும், செயற்கை முறை இனவிருத்தி மூலம் பிறந்த கன்றும்.

படுத்தவும், கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த இதுவரை செயல்படாமல் இருந்த குளிர்விக்கும் நிலையங்களை, மீண்டும் இயங்கச் செய்யவும், தமிழ்நாடு பால் பண்ணை வளர்ச்சிக் கழகம், இந்தியப்பால், பண்ணை வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ. 9 இலட்சம் உதவித் தொகை பெற்றுள்ளது. பால் பண்ணை, கால் நடை பராமரிப்புப்பணிகள் ஆகியவற்றில் கூட்டுறவுகளுக்குத் தேவையான தொழில் நுட்ப உதவியையும் இது அளிக்கிறது.

## சிறப்புத் திட்டங்கள்

இக்கழகத்தின் இயல்பான நடவடிக்கைகள் தவிர, சமுதாயத்தில் பின்தங்கிய வகுப்பினருக்காகப் பல திட்டங்களை அரசு செயற்படுத்தி வருகிறது. இவற்றின் விவரங்களாவன:

### (அ) மலைப்பகுதிகள் வளர்ச்சித் திட்டம்:

1975-76-லிருந்து தொடங்கி ஐந்து ஆண்டுக் காலத்திற்கு நீலகிரி மாவட்டத்தில் ரூ. 85.00 இலட்சம் மதிப்பில் பால்பண்ணை வளர்ச்சிக்கு இத்திட்டம் வகை செய்யும். ஐந்தாம் ஆண்டு இறுதியில் பால் உற்பத்தியின் அளவு 30,000 லிட்டர்களாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் 10,000 விவசாயிகள் பயனடைவார்கள். இதற்கென இதுவரை 41.31 இலட்சம் ரூபாய் அரசு கொடுத்துள்ளது.

### (ஆ) மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி வளர்ச்சித் திட்டம்:

இத்திட்டத்தின்கீழ் ரூ. 11.90 இலட்சம் செலவில் பாலாடை-வெண்ணெய் தயாரிப்புத் தொழிற்சாலையொன்று கொடைக்கானலில் நிறுவப்படுகிறது. கொடைக்கானல் கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்திடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1977 மார்ச் திங்களில் ரூ. 5.00 இலட்சம் முதல் தவணையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கான தொடக்கப்பணிகள் நடந்தேறி வருகின்றன. நடந்தேறி வரும் பணியினைக் கண்காணித்த பிறகு மேற்கொண்டும் தேவைப்படும் தொகைகள் வழங்கப்படும்.

### (இ) பட்டதாரி/மெட்ரிகுலேஷன் விவசாயிகள் பால்பண்ணை திட்டம்:

''ஐந்து இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புத் திட்டம்'' மற்றும் ''வேலைவாய்ப்பு ஊக்குவிப்புத் திட்டம்'' ஆகியவற்றின்கீழ், 119 பட்டதாரிகளுக்கும், 41 மெட்ரிக்குலேஷன் தேறியவர்களுக்கும் சுயவேலை வாய்ப்பிற்காகப் பால்பண்ணையில் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி அளிக்கப்பட்ட பால் பண்ணை வளர்ச்சி விவசாயிகளில், 24 பட்டதாரிகளும், ஒரு மெட்ரிகுலேட்டும் மாதவரம் பால்பண்ணை காலனியில் அவர்களுடைய பால் பண்ணைப் பிரிவை அமைத்துள்ளனர். 35 பட்டதாரிகளும், 4 மெட்ரிகுலேட்டுகளும் நாட்டுடைமையாக்கப்பட்ட நான்கு வங்கிகளிடமிருந்து ரூ. 34.62 இலட்சம் நிதி உதவி பெற்று, மாவட்டங்களில் அவர்களுடைய சொந்த நிலங்களிலேயே பால்பண்ணையை அமைத்துள்ளனர்.

மாதவரம் பால்பண்ணையில் உள்ள பட்டதாரிகள் 500 லிட்டர்கள் பால் வழங்குகின்றனர்: வெளியூர்களில் உள்ள பட்டதாரிகளின் மூலம் நாளொன்றுக்கு 1,140 லிட்டர்கள் பால் இந்நிறுவனத்துக்கு வழங்கப்படுகிறது.

### (ஈ) சிறப்புக் கால்நடை வளர்ச்சித் திட்டம்/கன்று வளர்ப்புத் திட்டம்:


25,000 சிறு உழவர்கள் சொற்ப நில உழவர்கள் வேளாண்மைத் தொழிலாளர்களிடம், உள்ள கலப்பினக் கிடாரிக் கன்றுகளை நல்ல முறையில் வளர்ப்பதற்காக இத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதன்படி தேவையான சத்துணவும், மருத்துவ உதவியும் அளிக்கப்படும். சத்துணவின் விலையில் பெரும்பகுதி மானியமாகவும் வழங்கப்படும்.

வடஆர்க்காடு, தென்னார்க்காடு, சேலம், கோவை, மதுரை, ஆகிய மாவட்டங்களில் 3 வருட காலத்திற்கு கன்று வளர்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ரூ. 237.97 இலட்சம் நிதியுதவியை அளிக்க இந்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இதுவரை இந்த மாவட்டங்களில் 2,486 கன்றுகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

### (உ) அரிசன நலத் திட்டம்:

இத்திட்டத்தின்கீழ், அரிசன உறுப்பினர்களுக்குக் கறவையினங்களை வாங்குவதற்கான உதவியை அளிப்பதற்கு, மதுரை மாவட்டத்தில் 15 கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கங்களையும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் 12 கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கங்களையும் அரசு தேர்ந்தெடுத்துள்ளது. மதுரை மாவட்டத்திற்கு ரூ. 22.50 இலட்சமும், வடஆர்க்காடு மாவட்டத்திற்கு ரூ. 18.00 இலட்சமும் மூன்று ஆண்டுக்கால அளவிற்கு அளிக்கப்பட்டுள்ளது. தெரிந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு சங்கத்திடமிருந்தும் 100 உறுப்பினர்களுக்குக் கறவையினங்கள் வாங்குவதற்கான கடன்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

கறவையினங்கள் வாங்குவதற்கு அரிசன உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ரூ. 1,500



செயற்கைமுறை இனவிருத்தி மூலம் பிறந்த கன்றுகளை வளர்ப்பதற்குத் தமிழ்நாடு பால்வள நிறுவனம் மானியம் வழங்குகிறது.

வழங்க இத்திட்டம் வழி செய்கிறது. இதில், ரூ. 1,000 கடனாகவும் எஞ்சிய 500 ரூபாய் உதவியாகவும் வழங்கப்படுகிறது. ஒரே உறுப்பினர் இரண்டாவது கறவையினம் வாங்க வேண்டுமாயின், முதல் கறவையினத்தை வாங்கிய பிறகு 10 மாதங்கள் கழித்து பிறகு தொகை அளிக்கப்படுகிறது.

**(ஊ) வறட்சியால் பாதிக்கக் கூடிய பகுதிகளுக்கான திட்டம்:**

இம்மாநிலத்தில் தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளாகக் குறிப்பிடப்படுகின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ. 23.55 இலட்சம் செலவு மதிப்பீட்டில் பால்பண்ணை வளர்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திட்டம் ஆய்வின் கீழ் உள்ளது. முகவை மாவட்டத்திற்கான மொத்த திட்ட மதிப்பீடு 16.81 இலட்சம் ரூபாய்கள். இதன்கீழ், பால் குளிர் பதன நிலையமொன்று பரமக்குடியில் அமைக்கப்படவிருக்கிறது. இதற்காக ரூ. 1.8 இலட்சம் தொகை வழங்கப்பட்டுள்ளது.

## பிரச்சினைகள் தீர்க்கப்படும்!

சிறு உழவரின் வளர்ச்சி முகவரமைப்பு, வறட்சிக் காட்படும் வட்டாரத் திட்டம் போன்ற ஏனைய பல திட்டங்களின் துணையுடன் பால் பெருக்குத் திட்டமும் செயல்படுத்தப்படுவதால் பால் உற்பத்தி பெருகியுள்ளது. கொள்முதல் செய்வதற்காகக் கிடைக்கக்கூடிய பாலின் அளவு உயர்ந்துள்ளது. ஆனால், தனியார் நிறுவனங்கள், பிற மாநில பால்வள நிறுவனங்கள் ஆகியவற்றின் போட்டியின் காரணத்தால் பால், பால் பண்ணை உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றை விற்பனை செய்வதில் சில சிக்கல்கள் உருவாகியுள்ளன.

கேரளா, ஆந்திரா, கர்நாடகம், மகாராஷ்டிரம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் நம்முடைய பால் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. தமிழ்நாடு பால்வள நிறுவனம், கூட்டுறவுச் சங்கங்களின் மூலம், மாநிலத்தில் மேற்கொண்டும் பல நகரங்களிலும், சிறு நகரங்களிலும் பால் விற்பனைக்காக ஏற்பாடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு முன் கண்டிராத அளவுக்கு பால் உற்பத்தி பெருகி உள்ளதன் விளைவாக, சில பிரச்சினைகள் ஏற்பட்டு உள்ளன. அதாவது பால்வள நிறுவனத்தின் பால் நிலையங்கள், சேரிக்கும் பாலின் அளவை ஒழுங்குபடுத்தும் அவசியம் ஏற்பட்டு உள்ளது. வழங்கப்படும் பாலை ஏற்றுக் கொண்டால் அதனை உடனே பதப்படுத்தி விற்பனை செய்வதற்கான வசதிகளைக் கருத்திற்கொண்டு, பால் அதிகமாகக் கிடைக்கும் காலங்களில் உற்பத்தியாளரிடமிருந்து ஏற்க வேண்டிய பாலின் விகிதத்தை வரையறுப்பது ஓரளவுக்குத் தவிர்க்க முடியாததாகும். பால் உற்பத்தியாளர்கள், நுகர்வோர்கள் ஆகிய இருதரப்பாரின் நலன்களைக் கருத்திற்கொண்டு நியாயமான முறையில் இவ்வாறு செய்யப்பட்டுவருகிறது.

**[தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் அனுமதிக்காக வைக்கப்பட்ட பால் பண்ணை வளர்ச்சித் துறையின் 1977-78-ஆம் ஆண்டு கொள்கை விளக்கத்திலிருந்து தொகுக்கப்பட்டது.]**



அடையாறு குழந்தைகள் மன்றத்தில் நேரு


கப்பலோட்டிய தமிழன்
வ. உ. சிதம்பரனார்
தோற்றம் : 5 - 9 - 1872.
மறைவு : 18 - 11 - 1936.

# நான் கண்ட வ.உ.சி.

— திரு கி. ஆ. பெ. விசுவநாதம்



திருவாளர் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் தமிழ்நாட்டுத் தேச பக்தர்களுள் ஒருவர். தேச பக்தர் என்றாலே திரு. பிள்ளை அவர்களைத்தான் குறிக்கும். நாட்டின் மீது அவருக்கு உள்ள பற்று உள்ளபடியே அளவைக் கடந்தது எனக் கூறலாம்.

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் தொண்டு செய்திருந்த காலத்திலேயே திரு பிள்ளை அவர்கள் இந்தியாவில் தேசத் தொண்டு செய்தவர்கள். உலோக மான்ய பாலகங்காதர திலகர் அவர்களின் அரசியல் மாணவர் ஆவர்.

பலமுறை சிறை சென்றவர்கள். அவர் செய்த குற்றமெல்லாம் இந்நாட்டின்மீதும், மக்களின் மீதும் அன்புகொண்ட ஒன்று தான். இக்காலத்தில் சிறைக்குச் செல்ல விரும்புவோர் பலருக்கு நன்கு தெரியும், முதல் வகுப்பும் மூந்திரிப்பருப்பும், அல்வாவும், ஆரஞ்சுப் பழமும் கிடைக்குமென்று. அந்தக் காலத்தில் அனைவருக்கும் தெரியும், செக்கு இழுத்துச் சீரழிய வேண்டுமென்பது! கற்கள் உடைபடச் செய்ய வேண்டும். இன்றேல் பற்கள் உடைபட வேண்டும். குத்துவதெல்லாம் நெல்லாக இருக்கும். உண்பதெல்லாம் களியாக இருக்கும். இக்காலம் சிறைக்குச் சென்றவர்கள் போற்றுதலும் பூமாலையும் பெறுகிற காலம்; அக்காலம் தூற்றுதலும், துயரமும் பெறுகிற காலம். முடிவாகக் கூறவேண்டுமானால் அக்காலத்தில் எல்லாச் சாதியினரும் சிறைக்குச் சென்றவர்களை வெறுத்துச் சமூக பகிஷ்காரம் செய்த காலம் எனக் கூறலாம். அப்படிப்பட்ட காலத்தில்தான் திரு. பிள்ளை அவர்கள் சிறை புகுந்தார்கள். செக்கும் இழுத்தார்கள். களைப்பு மிகுதியினால் குடிக்கத் தண்ணீர் கேட்டு, தண்ணீர் பெறாமல் சவுக்கடியையே பெற்றார்கள். சில நாட்கள் அல்ல; பல ஆண்டுகள். நாட்டுப் பற்றுக் காரணமாக உயிர் போகும் வேதனையைப் பெற்று 'வாடி வதங்கி' வருந்த உழைத்தவர் திரு. பிள்ளை அவர்கள் ஆவர்.

படிப்பு இல்லாமல் தேசத் தொண்டு செய்யப் போனவரல்லர் அவர்; அக்காலத்திலேயே கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றவர்கள்; தொழிலில்லாமல் தேசத் தொண்டு செய்யப் புறப்பட்டவர் அல்லர் அவர்; வக்கீல் தொழில் செய்து கொண்டிருந்தவர். வருமானமில்லாமையால் தேசபக்தி காட்டப் புறப்பட்ட வக்கீல்களைச் சேர்ந்தவர் அல்லர் அவர்; தொழிலில் நல்ல வருமானத்தைப் பெற்று வந்தவர். புகழுக்கும் பெருமைக்கும் ஆசைப்பட்டுப் பொதுத்தொண்டு செய்யப் புறப்பட்டவர் அல்லர் அவர்; அவரது அருஞ்செயலையும், பெருங்குணத்தையும், உள்ளத் தூய்மையையும், உழைப்பின் சிறப்பையும் விளக்க இதைவிட வேறெதுவும் கூறவேண்டியதில்லை.

திரு பிள்ளை அவர்களின் பேச்சு இரத்தத் துடிப்பை அல்ல. எலும்புகளையும் துடிக்கச் செய்யும். உணர்ச்சி கலந்த அரசியல் ஆவேசப் பேச்சுக்கள் திரு. பிள்ளை அவர்களோடு மறைந்து ஒழிந்தன.

பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிகள் தூத்துக்குடியிலிருந்து கொழும்புக்குச் செல்லும் கட்டணத்தை உயர்த்தித் தமிழ்நாட்டு வர்த்தகத்திற்கே கேடு விளைவித்தன. இதனையறிந்த திரு. பிள்ளை அவர்கள், அவர்களோடு, போராடியும், நியாயத்திற்கு இணங்க மறுத்ததனால் அவர்களோடு போட்டியிட்டும், தாமே ஒரு கப்பலை ஓட்டித் தமிழ்நாட்டு வர்த்தகத்திற்குத் தொண்டு செய்தார்கள்.

அவர் ஒரு தொழிலாளர் தலைவர். தொழிலாளர் போக்கைத் தொடர்ந்து போகும் தலைவராயில்லாமல், தொழிலாளரைத் தன் போக்கில் நடத்திச் செல்லும் தலைவராயிருந்தவர்.

அவர் ஒரு முறை சிறை சென்ற போது தூத்துக்குடி இரயில்வே நிலையமும் சர்க்கார் கட்டிடங்களும் தூள் தூளாக்கப்பட்டன. நெருப்புப் பொறிகளும் பறந்தன. அரசாங்கமே நடுங்கி அஞ்சுகின்ற அளவுக்கு அவர் ஓர் ஆபத்தான மனிதராகக் கருதப்பட்டார்.


அவருடைய தமிழ்ப் பற்று தமிழ்நாட்டிலே நன்கு பதிக்கப் பெற்றிருக்கிறது. அதுதான் ''திருக்குறள் வ. உ. சிதம்பரம் பிள்ளை பதிப்பு'' என்பதாகும். இது இன்னும் நம்மிடையே இருந்து கொண்டு அவர்களையும்

அவர்களது தமிழ்ப் பற்றையும் நினைப்பூட்டி வருகின்றது.

திரு. பிள்ளை சிறையிலிருப்பார்; வீட்டிலிருந்து செய்திவரும். வருகின்ற செய்தி ''குழந்தைக்குத் துணியில்லை; உணவுக்கு வழியில்லை'' என்றிருக்கும். கண்கள் கலங்கும்; மனம் கலங்காது. இத்தகைய செய்திகள் பலவற்றை அரசியல் உத்தியோகஸ்தர்களே அவரிடம் அனுப்பி வைப்பார்கள். காரணம் எந்த வகையிலாயினும் மன்னிப்பைப் பெற்று விடுதலை பெற்று வெளியேற வேண்டுமென்பதுதான். இருமுறை ஆயுட்காலத் தண்டனை, அந்தமான் தீவுக்கு நாடு கடத்தும் தண்டனைகளைப் பெற்று, செக்கிழுத்து வாடி வதங்கி அடைத்துப் போன காதுகளுக்கு இச்செய்திகள் எட்டும். மடிவதில் மனம் கொண்டாரேயன்றி மன்னிப்பில் மனம் கொள்ளவில்லை.

ஒரு நாட்டுத் தலைவன் மனைவியையும், மக்களையும் காப்பாற்றத் தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியாமையினால் அவர்கள் இணங்கி உதவி செய்யவில்லை. அவர் வாழ வகையின்றி வருந்தினார். 'இப்படிப்பட்ட மக்களுக்காகச் சிறை புகுந்து, செக்கிழுத்து, மடிவதும் தன்னை நம்பியுள்ள மனைவி மக்களை இப்படிப்பட்டவர்களிடம் உயிரோடு ஒப்புவித்து அவர்களையும் மடியச் செய்வதும் நியாயமாகுமா?'' என்று சிறையில் பல ஆண்டுகள் எண்ணி எண்ணி வருந்தி நொந்தார்கள். கடைசியாக ஒரு நாள் கோர்ட் அவருக்கு மன்னிப்பு அளித்தது. மீண்டும் வக்கீல் தொழிலை நடத்தினார்கள். திரு. பிள்ளை அவர்களோடு சேர்ந்து நான்கு கூட்டங்களில் பேசியிருக்கிறேன். நான் பேசும் சில ஊர்களுக்கும் அவர்கள் வந்திருக்கிறார்கள். தமிழுக்காக அவர் மீது எனக்கு அளவு கடந்த அன்பு உண்டு. அதற்காக என் மீது அவருக்குப் பற்றுதல் உண்டு. தமிழ் ஒன்றே எங்களைப் பிணைத்தது.

அரசியலிலே நாங்கள் இருவரும் மாறுபட்ட கொள்கையுடையவர்கள். மாறுபட்ட இயக்கங்களைச் சார்ந்தவர்கள். ஒரு நாள் தட்டப்பாறையில் சந்தித்து ''உங்களைப் போன்றவர்கள் ஜஸ்டிஸ் கட்சியை விட்டுக் காங்கிரஸ் கட்சிக்கு வந்து சேர வேண்டும்'' எனக் கூறினார்கள். எனது இளமை முறுக்கினாலும், இரத்தத் திமிரினாலும் அவர்களைக் கடுமையாகத் தாக்கிக் கடுஞ்சொற்களைக் கூறிவிட்டேன். இன்றைக்கு முப்பது ஆண்டுகள் ஆயின என்றாலும் இன்றைக்கும் அது என் உள்ளத்தைச் சுடுகின்றது.



இது தற்சமயம், சென்னை அரசினர் தோட்டத்தில் 'காந்தி இல்லத்'தின் அருகில், பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இதற்காக அவர்கள் எனக்களித்த தண்டனை — அவர்களின் வீட்டுக்கு என்னை அழைத்துச் சென்று பல மணி நேரம் நிலைமையை விளக்கி, எனது கருத்தை மாற்றி அவர் தவறு செய்யவில்லை என மெய்ப்பித்ததுதான். பொதுவாக அவர் உள்ளத்தைத் திறந்து காட்டி, தம்முள்ளத்தே மறைத்து வைத்திருந்த பல செய்திகளையும் கூறிக் கண்கலங்கினார்கள். வருந்தினேன். எனது வலக்கையால் அவரது கண்ணீரைத் துடைத்ததுதான் இன்றைக்கு ஆறுதலாக இருந்து வருகின்றது. அவர் கூறிய செய்திகளை, வெளியிடும் காலம் இன்னும் வரவில்லை. அவரது மனைவியார் என் வயிற்றிற்கு ஒரு வேளை உணவளித்தார்கள். அவரோ என் அறிவுக்குப் பலநாள் உணவையளித்து மறைந்தார்கள். அவர் அளித்த உணவு, ''எவரையும் வையாதே! வைவது தமிழனின் பண்பல்ல-பிறரை வைவது தான் முன்னேறும் வழி என்று எண்ணாதே! எவன் முன்னேறினாலும் வைபவன் முன்னேற முடியாது என்பதை நம்பு, தவறு என்று கண்டால் திமையற்ற சொற்களால் அச்சமற்றுக் கூறு'' என்பதுதான்.

திரு. பிள்ளை அவர்களின் அறிவுரையும் அற உரையுமாகிய இது எனக்குப் பயன்பட்டது. உங்களுக்கும் பயன்படுமா? முயலுங்கள்.

எனது தலை சிலருடைய திருவடிகளில் மட்டுமே விழுந்திருக்கிறது. திரு. பிள்ளை அவர்கள் திருவடிகளும் அதில் சேர்ந்ததுதான். காரணம், பொய் பேசுவதில்லை என்பதை வாழ்நாள் முழுவதும் ஒரு கொள்கையாகக் கொண்டு உண்மையையே பேசி வந்தார்கள். அதுமட்டுமல்ல; உயிர்போகும்வரை ஒழுக்கத்தைக் கையாண்டு வந்த ஒரே தலைவர் அவர் என்பதினாலுமேயாம்!

வாழ்க வ. உ. சி. புகழ்!
வாழ்க அவர் பிறந்த நாடு!

**(புக்ஸ் வொர்ல்டு வெளியிட்டுள்ள வ.உ.சி. நூற்றாண்டு மலரான 'விடுதலை' வீரர் வ. உ. சி. என்னும் நூலிலிருந்து)**

## நன்றி செலுத்திய நல்லவர்!

''எழுமை எழுபிறப்பும் உள்ளுவர், தங்கள் விழுமந்துடைத்தவர் நட்பு'' என்னும் பொய்யாமொழிக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினார் வ.உ.சி. சுதேசிக் கப்பல் கம்பெனியின் வளர்ச்சியில் ஊக்கங்காட்டி உதவிய தூத்துக்குடி ஆறுமுகம் பிள்ளையின் பெயரைத் தமது பிள்ளைகளில் ஒருவருக்கு வைத்தார்.

ராஜத் துவேஷக் குற்றத்திற்காகச் சிறைத் தண்டனையடைந்ததன் காரணமாக இழந்துவிட்ட தமது வக்கீல் சன்னதைத் திரும்ப வாங்கிக் கொடுத்த நீதிபதி வாலஸ் துரையின் பெயரை மறவாது, தமது மற்றொரு புதல்வனுக்கு வாலீஸ்வரன் என்று பெயர் சூட்டினார்.

தமக்கு அவ்வப்போது வேண்டிய பொருளுதவி புரிந்து வந்த வேதியப்பப் பிள்ளையின் நினைவாகத் தமது மகளுக்கு வேதவல்லி என்று பெயர் வைத்தார். இவ்வாறு பல்லாற்றாலும் உதவி புரிந்த பலருக்கும் பிள்ளை தமது நன்றியைச் செலுத்தியுள்ளார்.

# வீட்டு வசதிகளை விரைவாகப் பெருக்கிடுவோம்!


மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர்.
—எஸ். இராகவானந்தம்



வீட்டு வசதித் துறையின் 1977-78-ஆம் ஆண்டுத் திட்டங்களில் கீழ்க் கூறப்பட்ட முக்கிய அம்சங்கள் அடங்கியுள்ளன.

### அதிக மூலதன ஒதுக்கீடு

இந்தத் திட்டங்களில் மிக முக்கியமான அம்சம் யாதெனில் 1975-76, 1976-77ஆம் ஆண்டுகளின் மூலதனங்களைக் காட்டிலும் இந்த ஆண்டில் மூலதனம் குறிப்பிட்ட அளவுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. 1975-76-ஆம் ஆண்டில் வீட்டு வசதித் துறையின் திட்டங்களின் மூலதனம் ரூ. 26.42 கோடியாகும். 1976-77 ஆம் ஆண்டின் மூலதனம் ரூ. 23.93 கோடியாகும். 1977-78ஆம் ஆண்டில் இந்த மூலதனம் ரூ. 32.20 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, 1976-77ஆம் ஆண்டின் மூலதனத்தைக் காட்டிலும் 35 சதவீதம் அதிகமாகும்.



### நிதி ஆதாரங்களிலிருந்து பங்கீடு

இரண்டாவது முக்கியமான அம்சம் யாதெனில் மேலே கூறப்பட்டுள்ள மூலதனங்களுக்கு நிதி ஆதாரங்களிலிருந்து பங்கீடு (ஒதுக்கீடு) செய்துள்ளதாகும். 1975-76ஆம் ஆண்டில் வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் மற்றும் கடன் ஈட்டுப் பத்திரங்கள் மூலமாக தேசீய மயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட நிதி உதவி ரூ. 6.59 கோடியாகும். 1976-77-ஆம் ஆண்டில், வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் மற்றும் கடன் ஈட்டுப் பத்திரங்கள் மூலமாக தேசீய மயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட நிதி உதவி ரூ. 6.57 கோடியாகும். 1977-78-ஆம் ஆண்டில் வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் மற்றும் தேசீய மயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து பெறப்பட இருக்கும் மொத்த நிதியுதவி ரூ. 9.50 கோடியாக இருக்குமென்று மதிப்பிடப்படுகிறது.

**இந்தச் சூழ்நிலையில் குறிப்பிடத்தக்க திருப்திகரமான அம்சம் யாதெனில், வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் ஒப்புதல் அளித்துள்ள திட்டங்களின் எண்ணிக்கையிலும் அதற்காகக் கொடுக்க ஒப்புக்கொண்டுள்ள மொத்தக் கடன் தொகையிலும் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதலிடம் வகிக்கிறது.**

### உலக வங்கியின் நிதியுதவி

மற்றும் ஒரு புது அம்சம் யாதெனில், வீட்டு வசதி வாரியத்தின் திட்டங்களுக்கும் உலக வங்கியின் நிதியுதவி கிடைத்துள்ளதாகும். இந்திய அரசு மூலமாகப் பெறப்பட இருக்கும் உலக வங்கியின் நிதியுதவியிலிருந்து வீட்டு வசதி வாரியத்தினுடைய ''முழு வசதிகள் அடங்கிய மனைகள்'' ( Sites and Services ) திட்டங்களுக்கு ரூ. 2.25 கோடி முதலீடு செய்வதற்கும், குடிசை மாற்று வாரியத்தினுடைய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ. 1.40 கோடி முதலீடு செய்வதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

### ஊரகக் குடியிருப்பு வசதிக்கு முக்கியத்துவம்


மற்றொரு முக்கியமான அம்சம் யாதெனில், தமிழ் நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் மூலமாக நிர்வகிக்கப்பட இருக்கின்ற ஊரகக் குடியிருப்பு வசதிக்கு ரூ.2கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகும். இந்த ஒதுக்கீட்டில் குறிப்பிடத் தக்க நிதி பழங்குடியினர் மற்றும் அரிசன மக்களின் நலன்களுக்காகப் பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனெனில், அவர்களுக்கு அளிக்கப்படும் கடன்களுக்கான முழு வட்டித் தொகையையும்மானியமாக ஈடுசெய்வதற்குத் தமிழ் நாடு அரசு முடிவு செய்திருக்கிறது. இம்மாற்றத்தின் விளைவாக, நகர்ப்புறத்தைச் சார்ந்திருக்கும் சங்கத்தின் கடனுதவிகளில் மிகப் பெரிய மாற்றம் ஏற்படும். இம்மாற்றம், ஊரகக் குடியிருப்புத் திட்டங்களுக்கு சங்கக் கடனுதவிகளை அதிகமாகசெலவு செய்யப்படும் கொள்கையின் முன்னோடியாக விளங்கும்.

### நலிந்த பிரிவினர்களுக்கு அதிக வீடுகள்

மற்றும் ஒரு வரவேற்கத் தக்க அம்சம் யாதெனில், பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினர்கள் மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினர்களுக்கான வீடு கட்டும் திட்டங்களுக்கான மூலதனத்தில் ஏற்படும் ஒரு மாற்றம் ஆகும். பொருளாதாரத்தின் மெலிந்த பிரிவினர்களுக்கும் குறைந்த வருவாய்ப் பிரிவினர்களுக்கும் 1975-76-ஆம் ஆண்டில் கட்டப்பட்டுள்ள 5,506 குடியிருப்புகளுக்கு எதிராக, இந்த இரு பிரிவினர்களுக்கும் 1977-78ஆம் ஆண்டில் 6,850 குடியிருப்புகள் கட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### அரசுப் பணியாளர்களின் வாடகைக் குடியிருப்புக்கு அதிக மூலதனம்

அரசு ஊழியர்களுக்குத் தேவையான வாடகைக் குடியிருப்புத் திட்டத்திற்கு மூலதனத்தை அதிகப்படுத்தியிருப்பது மற்றும் ஓர் அம்சமாகும். இந்தக் கணக்கில் 1975-76-ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட ரூ. 150 இலட்சம், 1976-77-ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட ரூ. 125 இலட்சம் தொகைக்கு எதிராக, 1977-78-ஆம் ஆண்டின் மூலதனம் ரூ. 200 இலட்சமாகும்.



## பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினருக்கான திட்டங்கள்

வீட்டு வசதி வாரியம், ஆண்டு வருமானம், ரூ. 4,200-க்கும் குறைவாகப் பெறுகின்ற, பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினருக்குக் குறைந்த செலவிலான வீட்டு வசதிச் சிறப்புத் திட்டத்தின் கீழ், ரூ. 6,000த்திலிருந்து ரூ. 13,000 வரை செலவிலான வீடுகளைத் தவணை முறைத் திட்டத்தின் கீழ் ஒதுக்கல் செய்வதற்காகக் கட்டுகிறது. வீட்டின் மொத்தச் செலவுத் தொகையில் 1/10 பகுதி முன் பணமாக வசூல் செய்யப்படுகிறது. மீதித் தொகை 20 ஆண்டுக் காலத்தில் வசூல் செய்யப்படுகிறது. இதற்கு வீட்டு வசதி வாரியத்தின் மேற்பார்வைக் கட்டணம், வழக்கமான 12.5 சதவீதத்திற்குப் பதிலாக, 6.25 சதவீதம்தான் வசூலிக்கப்படுகிறது. 1977-78-ஆம் ஆண்டில் கட்டப்படவிருக்கும் குடியிருப்புகளின் எண்ணிக்கை 2,353.

அரசு நிதி நிலை அறிக்கையில் இத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 5 இலட்சம், வீட்டு வசதி வாரியத்திற்குக் கடனாகக் கொடுக்கப்படும். தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், தனது சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டும், வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவிகளைக் கொண்டும், இத் திட்டத்திற்காக 1977-78-ஆம் ஆண்டில் ரூ. 65.56 இலட்சம் செலவு செய்வதற்கு உத்தேசித்திருக்கிறது.

## குறைந்த வருவாய்த் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டம்

தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் ஆண்டு வருவாய் ரூ. 4,200க்கும், ரூ. 7,200க்கும் இடைப்பட்ட வருவாயினரின் நலனுக்காக, இத்திட்டத்தின் கீழ், வீடுகளைக் கட்டித் தருகிறது. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படுகிற வீட்டின் விலை ரூ. 18,000 ஆகும். இத்திட்டத்தின்கீழ், வீடுகள் ஒதுக்கல் பெறுகிற நபர்கள் 25 சதவீதத் தொகையை முன் பணமாகச் செலுத்த வேண்டும். மீதித் தொகை 20 ஆண்டுக் காலத்தில் மாதத் தவணையில் செலுத்தப்பட வேண்டும். 1977-78-ஆம் ஆண்டில், 1,227 வீடுகள் கட்டப்பட இருக்கின்றன.

## நடுத்தர வருவாய்த் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டம்


தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டுள்ள பல வீட்டு வசதித் திட்டங்களில் நடுத்தர வருவாய்த் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டமும் ஒன்றாகும். ஆண்டு வருமானம் ரூ. 7,200க்கும் ரூ. 18,000-த்திற்கும் இடைப்பட்டவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ், வீட்டு வசதி செய்து தரப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், கட்டப்படும் வீட்டின் விலை ரூ. 42,000 என்று வரையறுக்கப்பட்டு உள்ளது. மொத்த விலையில் 25 சதவீதம் முன் பணமாகச் செலுத்தப்பட வேண்டும். மீதித் தொகையை 15 ஆண்டுகளில் மாதத் தவணைகளில் செலுத்த வேண்டும். வீட்டு வசதி வாரியம் இது காறும் 5,003 வீடுகளைக் கட்டியுள்ளது. 1977-78-ஆம் ஆண்டில் 1,119 வீடுகளைக் கட்டுவதற்கு உத்தேசித்துள்ளது. தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் தனது சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டும், அரசுக் கடன் தொகையைக் கொண்டும், வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியைக் கொண்டும், இத்திட்டத்திற்கு 1977-78-ஆம் ஆண்டில் ரூ. 391.19 இலட்சம் செலவு செய்வதற்கு உத்தேசித்துள்ளது.

## உயர்ந்த வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டம்

தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், உயர்ந்த வருவாய்ப் பிரிவினர்களுக்கும் வீட்டு வசதித் திட்டங்களைச் செயல்படுத்துகிறது. இத்திட்டத்தின்கீழ், வீடு ஒதுக்கல் பெறுவதற்கு வருவாய் வரம்பு ஆண்டுக்கு ரூ. 18,000த்திற்கும் மேற்பட்டதாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வீட்டின் மொத்த விலையில் 25 சதவீதம் முன் பணமாகச் செலுத்தப்பட வேண்டும். மீதித் தொகையைத் தவணைகளில் செலுத்த வேண்டும்.

## நிலம் கையகப்படுத்தல்—வீட்டு மனை மேம்பாட்டுத் திட்டம்

நிலத்தின் விலைகளில் ஊக பேரங்களைத் தடுக்கும் பொருட்டும், வீடு கட்டுவதற்கு நியாயமான விலையில் நிலம் கிடைக்கச் செய்யும் பொருட்டும், பெருமளவில் வளர்ந்து வரும் நகரங்களில் நெரிசலைத் தணிக்கும் பொருட்டும், நிலங்களைப் பெருமளவில் முன்னதாகக் கையகப்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் இத்திட்டத்தை ஆதாயம்—விரயம் அற்ற அடிப்படையில் செயற்படுத்தி வருகிறது. இது நகரங்களுக்குள்ளும், வெளியிலும் பெருமளவு நிலங்களைக் கையகப்படுத்துகிறது. அவற்றைத் தன்னிறைவுள்ள சிறிய நகரியங்களாக அல்லது நகர அண்மைப் பகுதிகளாக மேம்படுத்துகிறது. அப்பகுதியில் நல்ல சாலைகள், தெரு விளக்குகள், நீர் வழங்கல், கழிவு நீர்க்கால்கள், விளையாடும் இடங்கள், பூங்காக்கள், மற்றும் பள்ளிகள், மருத்துவ மனைகள், கடைகள், விளையாட்டுத் திடல்கள் போன்ற ஏனைய பொது வசதிகளை அமைத்துத் தருகின்



றது. 1977-78—ஆம் ஆண்டின் குறியிட்டின் படி, 300 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப் பட இருக்கின்றன.

இத்திட்டத்திற்காக அரசு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை, வீட்டு வசதி வாரியத்திற்குக் கடனுக வழங்கப்படும். தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் தனது சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டும், வீட்டு வசதி நகர்ப் புற வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியான ரூ. 137 இலட்சத்தின் உதவி யுடனும் இத்திட்டத்திற்காக 1977-78—ஆம் ஆண்டில் ரூ. 240 இலட்சம் செலவு செய்ய உத்தேசித்துள்ளது.

### உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்பட இருக்கும் முழு வசதிகளுடன் அடங்கிய மனைகள் திட்டம்

வீட்டு வசதி வாரியம் கூடிய விரைவில் உலக வங்கி நிதியுதவியுடன், முழு வசதிகள் அடங்கிய மனைகள் திட்டத்தைச் செயல் படுத்த இருக்கின்றன. இத் திட்டத்தின் கீழ் சென்னை நகரத்தை ஒட்டியுள்ள அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் ஆகிய இடங் களில் 13,467 மனைகள் வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. இதற்காக, ரூ. 932.88 இலட் சம் செலவில் மொத்தம் 168 எக்டேர் நிலங் கள் கையகப்படுத்தப்படும். இத்திட்டத்தில் வீட்டு மனைகளைத் தவிர வாணிபத்திற்காகவும், சிறு கைத் தொழிலுக்காகவும் மனைகள் ஒதுக் கீடு செய்யப்படும்.

இத்திட்டத்தில் சுகாதார வசதிகளுடன் கூடிய ஒவ்வொன்றும் 40 சதுர மீட்டர் பரப் பளவிலான 6,228 மனைகளும், 47 சதுர மீட் டர் பரப்பளவிலான கூரையுடன் கூடிய 2,742 மனைகளும், 47 சதுர மீட்டர் அளவி லான குடியிருப்புடன் கூடிய 792 மனைகளும் பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினர் களுக்கு வழங்கப்படும். மேலும் 74 முதல் 140 சதுர மீட்டர் பரப்பளவுடைய 3,284 மனைகளும், 223 சதுர மீட்டர் பரப்பளவி லான 421 நடுத்தர வருவாய்த் தொகுதி மனைகளும் வழங்கப்படும்.

இத்திட்டத்தில், ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், பொது உபயோகம், வாணிப உபயோகம், சமுதாயக் கூடங்கள், சிறு தொழில்கள் ஆகியவைகளுக்குத் தேவை யான இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 932.88 இலட்சமாகும். இது. மூன்று ஆண்டுகளில் முடிக்கப்படவிருக்கிறது. சென்னைப் பெரு நகர் வளர்ச்சிக் கழகம் தனது நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் உருவாக்கியிருக் கும் இத் திட்டத்தைத் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்த உத்தேசித்துள்ளது.

### தமிழ்நாடு அரசுப் பணியாளருக்கான வாடகை வீட்டு வசதித் திட்டம்

இத்திட்டம் எல்லா அரசுப் பணியாள ருக்கும் உரியது. தமிழ் நாடு அரசு, வீட்டு வசதி அளிக்கப்பட்டவர்களிடமிருந்து குறைந் வாடகையாகச் சம்பளத்தில் 10 சதவீதத்தைப் பிடித்துக் கொள்கிறது. இவர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்கப்படுவதில்லை. சாதாரண யாக இந்த அடிப்படையில் பிடிக்கப்படுகின்ற வாடகை கட்டுபடியாகும் வாடகையை விடக் குறைவாகும். தொகை வேறுபாடு மாநில அரசால் ஈடு செய்யப்படுவதால், அரசுப் பணியாளர்கள், அரசின் ஈட்டுத் தொகையின் பலனை அனுபவிக்கின்றனர். திட்டத்தைச் செயல்படுத்தும் முகவர் அமைப் பாக வீட்டு வசதி வாரியம் உள்ளது. கட்டி முடிக்கப்பட்ட பின், வீடுகளைப் பேணிப் பாது காக்கும் பொறுப்பினையும் அதுவே ஏற்கிறது. கட்டடங்களின் உரிமை மாநில அரசிடம் நிலை பெறுகிறது. பொதுவாக இத்திட்டத்தின் கீழ், வீடுகள் அரசாங்க நிலங்களில் கட்டப்படு கின்றன.

1977-78ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டு உள்ள தொகை ரூ. 150 இலட்சத்திலிருந்து, ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வரும் திட்டத்தில் 557 வீடுகளும், புதிதாகத் தொடங்கிச் செயல்படுத்தப்பட்ட இருக்கும் திட்டத்தில் 756 வீடுகளும் கட்டி முடிக்கப் படும். 1977-78—ஆம் ஆண்டில் கூடுதலாக, 2,000 குடியிருப்புகள் கட்டும் பணியை வீட்டு வசதி வாரியம் மேற்கொள்ளுவதற்கு உறு துணையாக வரவு செலவுத் திட்டத்தில் மேலும் ரூ. 50 இலட்சம் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அரசுப் பணியாளர்களுக்கு வீடு கட்ட முன் பணம் வழங்கல்

மனைகள் வாங்குவது உட்பட வீடுகள் கட்டுதல், முன்னரே கட்டப்பட்ட வீடுகள் வாங்குதல் ஆகியவற்றிற்காக அரசுப் பணியாளர்களுக்கு முன் பணங்கள் வழங்கப்படுகின்றன. 6 ஆண்டுகள் தொடர்ந்து அரசின் கீழ் பணி புரிகின்ற அரசுப் பணியாளர்கள் இக்கடன் பெறத் தகுதியுடையவர்கள் ஆவார்கள். அரசுப் பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய சம்பளத்தைப் போன்று 60 மடங்குத் தொகை அல்லது ரூ. 70,000 இவற்றில் எது குறைவாக உள்ளதோ, அத்தொகை முன் பணமாக வழங்கப்படுகிறது. கடன் தொகை, பணியாளர்கள் தங்கள் பணிக் காலத்திற்குள் அவர்களது சம்பளத் தொகையில் 1/3 பங்கு வீதம் திருப்பிச் செலுத்துவதற்கு உள்ள திறனின் அடிப்படையில், இறப்பு மற்றும் ஓய்வுக்காலப் பணிக் கொடையின் அடிப்படையிலும் நிச்சயிக்கப்படுகிறது. 1977-78—ஆம் ஆண்டில் மாநில அரசு அலுவலர்களுக்கு இவ்வாறு முன் பணம் வழங்கும் வகையில் ரூ. 125 இலட்சம் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. அண்மைக் காலம் வரை இக்கடன் தொகைக்கு ஆண்டுக்கு 9 சதவீத வட்டி வசூலிக்கப்பட்டு வந்தது. அரசுப் பணியாளர்களுக்கு மிகப் பெரிய சலுகை அளிக்கும் நோக்குடன், அரசு 1977-78—ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்படும் வீடு கட்டும்தொகைக்கு கீழ்க் கூறப்பட்டுள்ள வீதங்களில் வட்டி வசூல் செய்ய முடிவு செய்துள்ளது :

| | சதவீதம் |
|---|---|
| ரூ. 25,000 வரையிலுமான கடன் தொகைக்கு ஆண்டுக்கு ... | ...7.5 |
| ரூ. 25,001-லிருந்து ரூ. 50,000 வரையிலுமான கடன் தொகைக்கு ஆண்டுக்கு ... ... | ...8 |
| ரூ. 50,001லிருந்து ரூ. 70,000 வரையிலுமான தொகைக்கு ஆண்டுக்கு ... ... | ...9 |

## காவலர் வீட்டு வசதித் திட்டம்

காவலர் வீட்டு வசதித் திட்டத்தின் நோக்கமே காவல் துறை சார்நிலைப் பணியாளர்களில் 80 சதவிகிதத்தினருக்கு குடியிருப்பு வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்பதாகும். 1977-78—ஆம் ஆண்டு வரவு—செலவு திட்டத்தில் பொதுப்பணித்துறை மூலம் 55 குடியிருப்புகளைக் கட்டுவதற்கு ரூ. 17.58 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ. 20.69 இலட்சம், வீட்டு வசதி வாரியம் மூலம் சென்னை இராஜா அண்ணாமலைபுரத்தில் 268 குடியிருப்புகளைக் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்டு உள்ளது.

## தொழிலாளர்களுக்கு மலிவு வீட்டு வசதித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், அரசுத் துறை, தனியார் துறை ஆகிய இரண்டு வழியிலும் தொழிலாளர் குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. அவை குறைந்த வாடகையில் அதாவது 1948—ஆம் ஆண்டுத் தொழிற்சாலைகள் சட்டத்தில் வரையறுத்துள்ளவாறு தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு வாடகைக்கு விடப்படுகின்றன. அவை ஒரு தொழிலாளரின் மாத வருவாய் ரூ. 350க்கு மேற்பட்டு, ஆனால் ரூ. 500க்கு உட்பட்டிருந்தால் நியாய வாடகையிலும் விடப்படுகின்றன. வீடு கட்டுவதற்காகும் செலவு உச்ச வரம்பில் கடனாக 50 வீதம், மானிய உதவியாக 25 சதவீதம் என்னும் விகிதாச்சாரத்தில் தனிப்பட்ட தொழிலதிபர்களால் ஏற்றுக் கொள்ளப்படும். இவ்வீடுகளுக்கு மாத வாடகை ரூ. 12லிருந்து ரூ. 15 வரை வசூலிக்கப்படுகிறது.

அரசு, தனியார் துறையில் தொழிலாளர்களுக்கு மலிவு வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் ரூ. 23.01 இலட்சம் செலவில் 372 குடியிருப்புகள் கட்டுவதற்காக 4 வீட்டு வசதித் திட்டங்களுக்கு அண்மையில் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

1977-78-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் தனியார் துறையில் தொழிலாளர்களுக்கு மலிவு வீட்டு வசதித் திட்டத்திற்கு ரூ. 10 இலட்சம் ஒதுக்கியுள்ளது. (கடன் ரூ. 7.50 இலட்சம்; மானியம் ரூ. 2.25 இலட்சம்).

## ஊரக வீட்டு வசதித் திட்டம்

தமிழ் நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் நிதி ஆதாரத்திலிருந்து ரூ. 2 கோடி ஒதுக்கீடு பெற்றதன் பயனாக, ஊரக வீட்டு வசதித் திட்டத்திற்கான தொகையானது குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

இது காறும் 10 ஊரக வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் வட்டார மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன. 1977—78-ஆம் ஆண்டில் மேலும் 50 சங்கங்களை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காகத் தமிழ் நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் கடன் கொடுக்கும் திட்டத்திற்கு ரூ. 2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரிசனங்களுக்கும், பழங்குடியினருக்கும் அளிக்கப்படும் வீடு கட்டும் கடன்களுக்கு, கடன் தொகையின் முழுப் பயனையும் பெறுவதன் பொருட்டு, கடன்களுக்கு வட்டி வாங்காமல் சலுகை அளித்து, அரசு முழு வட்டித் தொகையையும் ஈடு செய்கிறது.

## குடிசைப் பகுதி மாற்றும் பணி

குடிசைப் பகுதி மாற்றும் திட்டங்களுக்கு 1976-77-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 320 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1977-78-ஆம் ஆண்டில், குடிசை மாற்று வாரியத்தின் குடிசைப் பகுதி மாற்றுத் திட்டங்களுக்கும், விரைவுபடுத்தப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் உலக வங்கித் திட்டங்களுக்கும் சேர்த்து ரூ. 540 இலட்சம் ஒதுக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டு உள்ளது.

[தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அனுமதிக்காக வைக்கப்பட்ட 1977-78-ஆம் ஆண்டின் வீட்டு வசதி மானியக் கோரிக்கையின் கொள்கைக் குறிப்பிலிருந்து தொகுக்கப்பட்டது.]

# நேருவின் வாழ்விலே!
(படத் தொகுப்பு)




ஐந்து வயதிலே நேரு.




குழந்தைப் பருவத்திலே நேரு.

தந்தை மோதிலால் நேரு, தாய் ஸ்வரூப ராணி ஆகியோருடன் நேரு.






ஹாரோ பள்ளியில் நேரு (1906)




அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் வழக்கறி
ஞராய்ப் பணியாற்றிய தந்தையுடன்
நேரு (1912)

பேரறிஞர் பெர்னட்ஷாவுடன் நேரு.







நேரு வளர்ந்த 'ஆனந்த பவனம்'



மனைவி கமலா அவர்களுடன் நேரு (1931)

கவியரசர் ரவீந்திரநாத் தாகூருடன் நேரு
(1936)





சுபாஸ் சந்திர போஸ் அவர்களுடன் நேரு (1937)




மகாத்மா காந்தி அடிகளின் அறிவுரையை ஆழ்ந்து கேட்கிருர் நேரு. (1945, புதுடில்லி)




குதிரைச் சவாரி என்ருல் நேருவுக்கு மிகவும் விருப்பம். (கிண்டி ராஜ்பவன் அருகில்—1959).




கிரிக்கெட்டும் விளையாடுவார்! (வெள்ளத் துயர்துடைப்பு நிதி வசூலுக்காக, 1953-ஆம் ஆண்டில் டில்லியில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் நேருவும் கலந்து கொண்டு விளையாடினர்)



மோட்டார் சைக்கிளும் ஓட்டுவார்




1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14-ஆம் நாள் இரவு 12 மணி அடித்தவுடன், இந்தியா சுதந்திரம் பெற்றது. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதம மந்திரியாக 1947, ஆகஸ்ட் 15 அன்று, பதவி ஏற்றார் நேரு.



செங்கோட்டையின் கொத்தளத்தில் நின்று சுதந்திர நாள் விழா உரையாற்றுகிறார்.




இந்தியா சுதந்திரம் அடைந்த போது இங்கிலாந்தின் பிரதமராக இருந்த அட்லியுடன் நேரு (1947)




வின்ஸ்டன் சர்ச்சிலுடன் நேரு (1949).



கூட்டுச் சேராக் கொள்கையுடைய ஐம் பெரும் நாடுகளின் தலைவர்கள் (நேரு, நுக்குருமா, நாசர், சுகர்னோ, டிட்டோ)




மறைந்த அமெரிக்க ஜனாதிபதி கென்னடி யுடன் நேரு (இடையில் நிற்பவர் லிண்டன் பி. ஜான்சன்)



1954–ஆம் ஆண்டில் சைனாவுக்குச் சென்றபோது (மறைந்த) சீனப் பெருந் தலைவர் மா-சே–துங் அவர்களைச் சந்தித்துப் பஞ்சசீலக் கொள்கைகளைப் பற்றித் தெளிவு படுத்தினார்.

“நமது இலட்சியம் உலக சமாதானமே” என்கிறார்களா?








குஜராத் மாநில கிராமிய நடனக் கலைஞர் களுடன் நேரு.

இந்தியாவின் நவீன ஆலயங்களில் ஒன்றான பக்ரா அணையின் மின் நிலையத் தைத் துவக்கி வைத்தார் (1963)


அறிவியல் அறிஞர் 'ஆல்பர்ட் ஐன்ஸ்டின்' அவர்களைப் பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத் தில் சந்தித்து உரையாடினார் நேரு.



# தமிழ்நாட்டில் நேரு



அகமும் முகமும் மலர மூதறிஞர் ராஜாஜியை, சென்னை விமான தளத்தில், கட்டித் தழுவிய கண்கொள்ளாக் காட்சி; 'அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்' என்பதை மெய்ப்பிக்கிறது.



குழந்தைகளுடன் அமர்ந்து, குழந்தைகள் நடத்திய நிகழ்ச்சியைக் காண்கிறார்.

தூத்துக்குடியில் நடைபெற்ற கல்விச் சீர் திருத்த மாநாட்டில்......





1959-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு வந்தபோது மரம் நடும் விழாவைத் துவக்கி வைத்தார்.





பெருந்தலைவர் காமராஜ் அவர்களும் நேரு அவர்களும் கலந்துரையாடுதல்.




அடையாற்றில் உள்ள புற்றுநோய் மருத்துவமனைக்கு வருகை தந்தார்.

மாமல்லபுரம் சிற்பங்களைக் கண்டு வியக்கிறார்.










# நேருவின் வாழ்க்கைக் குறிப்புகள்



**1889** நவம்பர்த் திங்கள், 14ஆம் நாள் மோதிலால் நேருவுக்கும் சொரூப ராணிக்கும் அலகாபாத்தில் பிறந்தார்.

**1905** மே திங்களில் இங்கிலாந்தில் ஹர்ரோ பள்ளியில் சேர்ந்தார்.

**1910** பட்டப் படிப்பை முடித்து, சட்டப் படிப்பைத் தொடர்ந்தார்.

**1912** வழக்கறிஞராகி இந்தியா திரும்பினார். பங்கிபூர் காங்கிரசில் பார்வையாள ராகக் கலந்து கொண்டார்.

**1915** காங்கிரசின் சார்பில் முதன் முறையாக மேடை ஏறிப் பேசினார்.

**1916** பிப்ரவரி 8-ல், கமலாவை மணந்தார். டிசம்பரில் காந்தியடிகளுடன் முதல் சந்திப்பு.

**1919** மோதிலாலுடன் சேர்ந்து 'இண்டிபெண்டன்ட்' என்ற செய்தி இதழைத்தொடங்கினார்.

**1921** கிசான் கிளர்ச்சியில் ஈடுபட்டார்; வேல்ஸ் இளவரசர் வருகையின்போது கடையடைப்பு நடத்தத் திட்டமிட்டதற்காக, டிசம்பர் 6-ல் கைது செய்யப் பெற்று, ஆறு மாதச் சிறைத்தண்டனை அடைந்தார்.

**1925** அலகாபாத் நகராட்சித் தலைவரானார். பின்னர் அப்பதவியைத் துறந்தார்.

**1927** நவம்பரில், மாஸ்கோவில் நடைபெற்ற ருசியப் புரட்சியின் 10-ஆம் ஆண்டுவிழாவில் கலந்து கொண்டார். 'சோவியத் ருஷ்யா' என்ற நூலை எழுதினார். டிசம்பரில் சென்னையில் நடைபெற்ற 42-வது காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார்.

**1930** ஏப்ரல் 14-ல், உப்புச் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டதனால், ஆறு மாதச் சிறைத் தண்டனை பெற்றார்.

**1931** பிப்ரவரி 6-ல் மோதிலால் மறைவு.

**1934** ஜனவரி 1-ல் 'உலக வரலாறு' என்னும் நூலை எழுதி முடித்தார்.

**1935** பிப்ரவரி 14-ல், 'தன் வரலாற்றை' எழுதினார். செப்டம்பர் 4-ல் மனைவி மிகவும் உடல் நலம் குன்றியதால், அவரைப் பார்ப்பதற்காக, விடுதலை பெற்று, ஐரோப்பா சென்றார். வெளி நாட்டிலிருக்கும் போதே காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

**1936** பிப்ரவரி 28-ல் கமலா சுவிட்சர்லாந்தில் காலமானார். ஜூன் 2-ல் இந்திய அரசியல் சட்டத்தின் மாதிரிப் படியை உருவாக்கினார்.

**1938** நேருவின் தாயார் சொரூபராணி மறைவு.

**1939** சுபாஷ் சந்திர போஸுக்கும் காந்தியடிகளுக்கும் இடையில் எழுந்த வேறுபாட்டைப் போக்க முயன்றார்.

**1940** 'இந்தியரைக் கேட்காமலே உலகப் போரில் இந்தியா கலந்து கொள்ளும்' என்று ஆங்கில அரசு அறிவித்ததனால் எழுந்த சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டமைக்காக அக்டோபர் 31-ல் கைது செய்யப்பெற்று, இரண்டாண்டு சிறைத் தண்டனை விதிக்கப் பெற்றார்.

**1941** டிசம்பரில், விடுதலை பெற்றார்.

**1942** ஜனவரி 1-ல், 'நேருவே என் வாரிசு' என்று காந்தியடிகளால் புகழ் மாலை சூட்டப் பெற்றார்.

ஆகஸ்ட் 7-ல் பம்பாய் காங்கிரஸில் 'வெள்ளையனே வெளியேறு' என்னும்

# ஊரறிந்த இரகசியம்...?



## உங்களுக்கும் தெரியட்டுமே!

எனது புதுமையான சேமிப்புத் திட்டம் இரட்டைப் பலன்களுக்கு உறுதியளிக்கிறது. பிராவிடெண்ட் பண்ட், CTD, ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் பாலிஸிகள் போன்றவைகளில் முதலீடு செய்யப்படும் பணத்திற்குக் கவர்ச்சியான வரிவிலக்குச் சலுகைகளை வழங்குகிறது வருமான வரி சட்டங்கள்.

இவற்றுள் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் வரி விலக்கு தருவதோடு மட்டுமல்லாமல், நீங்கள் இன்ஷ்யூர் செய்த நாளிலிருந்து, அபாயங்களுக்கு எதிரான பாதுகாப்பை இதன் மூலம் மட்டுமே நீங்கள் பெற முடியும்.

முழு விவரங்கள் மற்றும் இன்ஷ்யூரன்ஸ் பிரீமியம்கள் மூலம் கிடைக்கும் அதிகபட்ச வரிச் சலுகைகள் பற்றி தெரிந்து கொள்ள, உங்கள் இன்ஷ்யூரன்ஸ் முகவரை ஏன் கலந்தாலோசிக்கக் கூடாது?

**ஆயுள் இன்ஷ்யூரன்ஸைப் போல் ஆதரவளிப்பது எதுவும் இல்லை!**

**லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா**

PRATIBHA-LIC-1156/77 TAM

தீர்மானத்தை நிறைவேற்றியதனால், ஆகஸ்ட் 8-ல் கைதானார். நீண்ட காலம் சிறைவாசம் பெற்றார்.

1944 ஏப்ரல் 13-ல், 'இந்தியாவின் கண்டு பிடிப்பு' என்ற நூலை, சிறையிலே எழுதத் தொடங்கி, செப்டம்பரில் முடித்தார்.

1945 ஜூலை 17-ல், முஸ்லீம் லீக் கேட்ட பாகிஸ்தான் பிரிவினையை வன்மையாகக் கண்டித்தார். பொதுத் தேர்தலில் ஈடு பட்ட காங்கிரசுக்கு முழு மூச்சுடன் தொண்டு செய்தார்.

1946 மார்ச் திங்களில், 'இந்தியாவின் கண்டு பிடிப்பு' நூலை வெளியிட்டார். ஆகஸ்ட் 12-ல், இடைக்கால அரசாங்கத்தை அமைக்குமாறு, வைஸ்ராய், நேருவிடம் கேட்க, அவர் ஒப்புக் கொண்டார்.

1947 ஆகஸ்ட் 15-ல் இந்தியா சுதந்திரம் பெற்றது. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரானார்.

1948 ஜனவரி 30-ல், காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்டார்; நேரு கண்கலங்கினார். வானொலியில் உருக்கமாக உரை யாற்றினார்.

ஆகஸ்ட் 20-ல் அணுசக்திக் குழுவின் முதற் கூட்டத்தைத் துவக்கினார்.

1950 ஜனவரி 26-ல், இந்தியா குடியரசு நாடு ஆகியது.

மார்ச் திங்களில், இந்தியத் திட்டக் குழுவைத் தொடங்கினார். ஜூலை 14-ல் கொரியாப் போரை நிறுத்தச் சொல்லி மூன்று வல்லரசுகளுக்கும் வேண்டுகோள் விடுத்தார்.

1954 ஜூன் 25-ல், சீனப் பிரதமர் சூ-என்-லாயை வரவேற்றார். பஞ்சசீலம் என்னும் ஐந்து கொள்கைகளை விளக்கினார்.

1955 ஜூலை 15-ல், 'பாரத ரத்னா' விருது பெற்றார்.

1957 ஜனவரி 12-ல், நாளந்தாவில் புத்தரின் 2,500-வது ஆண்டு விழாவில் பங்கேற்றார்.

1962 டிசம்பர் திங்களில், கோவா மக்களை போர்ச்சுக்கீசியரின் பிடியிலிருந்து விடுதலை பெறச் செய்தார்.

1964 ஜனவரியில், புவனேஸ்வரத்தில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றபொழுது நோய்வாய்ப்பட்டார். சிகிச்சைக்குப் பின் நலம் பெற்றார்.

மே 27. புதன் கிழமை காலை 6.20 மணிக்கு மீண்டும் நோய்வாய்ப்பட்டார். குருதிக் குழலில் கோளாறு ஏற்பட்டதனால், பகல் 2.00 மணிக்கு உயிர் துறந்தார்.

# குழந்தைகளைச் செம்மையாக வளர்க்க வேண்டும்

—ஜவஹர்லால் நேரு

"இந்த நாட்டிலுள்ள குழந்தைகள் அனைவரும், நல்ல முறையில் வளர்த்து வரப்படுகிறார்களா என்று கவனித்துக் கொள்வதில் நம் அனைவருக்குமே பொறுப்பு உண்டு என்று நான் கருதுகிறேன். ஏனெனில், குழந்தைகள் இந்த நாட்டின் செல்வம். இந்தச் செல்வத்தை நாம் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளுகிறோம் என்பதைப் பொறுத்துத்தான், இந்தியாவின் எதிர்காலம் அமைந்திருக்கிறது.

"உலக முழுவதிலும் உள்ள குழந்தைகளின் நினைவு எனக்கு வருகிறது. அவர்களிடம் பல விதங்களில் வெளிப்படையான மாறுதலைக் கண்டேன். பேசும் மொழிகள் எத்தனை! உடுத்தியிருந்த உடைகள்தான் எத்தனை விதம்! ஆனால் அவர்கள் அழகு முகங்களிலே காணப்பட்ட உணர்ச்சி, அதனால் தோன்றும் கவர்ச்சி, உலக முழுவதிலும் ஒன்றாகவே இருப்பதைக் கண்டேன். அவர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்தால், அவர்கள் விளையாடவோ, சண்டை போடவோ செய்வார்கள்.

"அவர்கள் சண்டை போட்டுக் கொள்வதும் ஒரு விளையாட்டுத்தான். தங்களுக்குள்ளே இன, நிற, சாதி, மத வேற்றுமைகளை அவர்கள் பார்ப்பதில்லை. அவர்களுடைய தாய் தந்தையரைவிடப் புத்திசாலிகளாக இருக்கிறார்கள். "துரதிருஷ்டவசமாக பெரியவர்களாக ஆகும்போது அவர்களுடைய இயற்கை அறிவை, பெரியவர்களின் போதனைகளும், நடத்தையும் மறைத்துவிடுகிகின்றன.

"ஆம், வயது வளர வளரத்தான் அவர்களுடைய உள்ளம் கறைப்படுகிறது என்று சொல்வதைவிட, கறைப்படுத்தப்படுகிறது என்றுதான் கூறவேண்டும்.


"குழந்தைகளின் பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு அறிவு போதித்து அறிவாளிகளாக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். என்னைக் கேட்டால் அவர்கள் குழந்தைகளை அதனதன் போக்கில் வளரவிட்டால், குழந்தைதைகள் தாங்களாகவே புத்திசாலிகளாக—அறிவாளிகளாக—விளங்குவார்கள்.

"உலகத்தின் பல விஷயங்களைக் குழந்தைகள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியந்தான். ஆனால் அவர்கள் தாங்களாகவே அவற்றைப் புரிந்து கொள்ள, நாம் வசதி வாய்ப்புக்கள் செய்து தரவேண்டும். நாமாக நமது மனப் போக்கின்படி உலக விஷயங்கள் பற்றிய ஞானத்தை அவர்கள் மூளையிலே திணிக்க முயற்சியெடுக்கக் கூடாது.

"குழந்தைகள் செம்மையாக வளருவதற்கு வகை செய்வதுதான் நமது நாட்டின் ஒவ்வொரு அரசியல் கட்சிகளின் இலட்சியமாகத் திகழ வேண்டும். சொல்லப்போனால் இதுதான் முழுமுதல் கொள்கையாக இருக்க வேண்டும்."

(இது ஒரு தொகுப்பு)


# நிதி குவிகிறது!



▲ மாண்புமிகு இந்திய அரசின் பெட்ரோலிய-இரசாயனத்துறை அமைச்சர் திரு பகுகுண அவர்கள், தமிழக புயல்-வெள்ள நிவாரணத்திற்காக, 'இந்தியன் பார்மசூட்டிகல் லிமிடெட்', 'இந்தியன் ஆண்டிபயாடிக் லிமிடெட்' ஆகியவற்றின் சார்பில், ரூபாய் 5 இலட்சம் மதிப்புள்ள மருந்து வகைகளை வழங்கும் முகத்தான், மருந்துகள் அடங்கிய ஒரு அடையாளப் பெட்டியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களிடம் வழங்கினார். மேலும், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் சார்பில் ரூபாய் 3 இலட்சத்திற்குரிய காசோலையையும், சென்னை உரஆலை, சென்னை எண்ணெய்த் தூய்மைப்படுத்தும் ஆலை ஆகியவற்றின் சார்பில் தலா ரூபாய் 1 இலட்சத்திற்குரிய காசோலையையும் மாண்புமிகு தமிழக முதல்வரிடம் வழங்கச் செய்தார்.



◀ தமிழக புயல், வெள்ள நிவாரண நிதிக்கு சென்னை குதிரைப் பந்தய சங்கத்தின் சார்பில் ஏற்கெனவே கொடுத்த 1 இலட்சம் ரூபாயைத் தவிர மேற்கொண்டு 3 இலட்ச ரூபாய் நிதி வழங்கப் பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்களிடம் குதிரைப் பந்தய சங்கத்தலைவர் திரு எம். ஏ. எம், ராமசாமி, குதிரைப் பந்தயச் சங்க நிர்வாக சபை உறுப்பினர் ஆர். ராமகிருஷ்ணன், சங்கச் செயலாளர் சோபே ஆகியோர் மூன்று இலட்ச ரூபாய்க்கான ''காசோலை''யை வழங்கினார்கள்.



# நிவாரணப் பணிகள் விரைந்து நடைபெறுகின்றன!

புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட தமிழக பகுதிகளைப் பார்வையிட்டுத் திரும்பிய மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு பகுகுணா அவர்கள், 18-11-1977 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் முன்னிலையில், சென்னை காந்தி மண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த நிவாரண முகாமில் தங்கியிருந்த மக்களுக்குப் போர்வைகளை வழங்கினர்.



நாகப்பட்டிணம் அருகில் உள்ள சடையங் கோட்டம் என்ற ஊர் வெள்ளத்தில் மூழ்கியது. அக்கிராம மக்கள் படகின் மூலம் பாதுகாக்கப்பட்டனர்.




வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு
ரொட்டிகள் வழங்கப்படுகின்றன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவி செய்யப்படுகிறது.



# வெள்ளத் துயர் துடைப்புக்கு அள்ளிக் கொடுத்திடுவீர்!



## ஆளுநர் வேண்டுகோள் !

தஞ்சை, திருச்சி, மதுரை மாவட்டங்களும், மற்றும் அதன் அருகில் உள்ள பகுதிகளும் புயல்—வெள்ளத்தினால் பெரும் சேதம் அடைந்திருப்பது மிகவும் கவலைக்குரியது ஆகும்.

தமிழக அரசு நிவாரணப் பணிகளைச் சிறந்த முறையில் செய்து வருகிறது.

இந்தச் சமயத்தில் அறப்பணி நிறுவனங்களும், மற்றும் பொதுமக்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ, தாராளமாக நிதி உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிரபுதாஸ் பட்வாரி
தமிழக ஆளுநர்.



## முதலமைச்சர் வேண்டுகோள் !

இயற்கையின் கடுமையான சீற்றத்திற்கு ஆளாகி, தொடர்ந்து பெய்த பெருமழையின் காரணமாக, வீடு, கால்நடைகள், உடைமைகள் அனைத்தையும் இழந்தோர், கண்ணீர் சிந்தி நிற்கும் தாய்மார்கள் இவர்கள்தம் துயர்துடைக்கும் பணியில் மிகத் தீவிரமாகச் செயலாற்றிடும் தமிழக அரசிற்கு உதவிட ஏராளமான, தாராள உள்ளம் படைத்த பெருமக்கள் முன்வந்துள்ளனர். இரக்க உணர்வோடு, நல்லோர்கள், தங்களது நன்கொடையைப் பணமாகவோ, காசோலை மூலமாகவோ எங்கே அனுப்புவது எனக் கேட்ட வண்ணமுள்ளனர். அவர்களுக்கெல்லாம் எனது நன்றியினை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

*"முதலமைச்சர் நிவாரண நிதி",*
*கோட்டை,*
*சென்னை-600009.*

என்ற முகவரிக்கு நன்கொடைகள் அனுப்பி வைக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பாதிக்கப்பட்ட பகுதிகளை விமானமூலம் சுற்றிப் பார்த்த வரை, ஏற்பட்டிருக்கும் சேதம், என்னைத் திடுக்கிட வைத்துவிட்டது. எத்தனை பேர்கள் பலியானார்கள், எத்தனை குழந்தைகள் அனாதையாக்கப்பட்டுள்ளனர், சேதம் எவ்வளவு, என்பதைத் தெளிவாகச் சொல்ல முடியாவிட்டாலும், பலகோடி ரூபாய்களைத் தாண்டும் என நான் அஞ்சுகிறேன். ஒவ்வொருவரும் தங்களது பொறுப்பை, கடமையை உணர்ந்து விரைந்து செயலாற்றக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அன்பன்,
எம். ஜி. இராமச்சந்திரன்
முதலமைச்சர்.






ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.